# திறவுகோல்

வைகாசி 2049 / மாத இதழ்

களம் காணாமல்
காவிரி கிடைக்காது

---

உதிரிகள்

---

மங்கை எனும்
மண் பொம்மை

---

வெத்தல பாக்கு போயில
போடுற பழக்கம் உண்டா?

---

தமிழ் மொழி விழா

செண்பக வனம்



வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் குழு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# மகிழ்ச்சியை நமக்குள் தேடுவோம்


மகாலெட்சுமி

நாம் அனைவருமே நம் வாழ்வில் ஏதோ ஒன்றைத் தேடிக் கொண்டுதான் இருக்கிறோம். அதிலும் நம்மில் பலர் நம்மிடம் இருக்கும் ஒன்றை, இல்லை என்று நினைத்து வாழ்வின் இறுதி வரை அதனை உணராமலே போய்விடுகிறோம். எதைப் பற்றி கூறுகிறேன் என்று மிகவும் குழப்பமாக உள்ளதா? ‘‘மகிழ்ச்சி‘‘. ஆம்! நம்மிடையே நிறைந்திருக்கும், நாம் உணராமல் மற்றவரிடம் தேடிக் கொண்டிருக்கும் மகிழ்ச்சியைக் குறித்து தான் பேசிக் கொண்டிருக்கிறேன். இதை படிக்கும்போது எத்தனைப் பேர் தாங்கள் மனமார மகிழ்ச்சியாக வாழ்வதாக உணர்கிறீர்கள். அவ்வாறு உணர்ந்திருந்தால் நீங்களே இவ்வுலகில் அதிர்ஷ்டசாலிகள். உங்களை பாராட்ட விழைகிறேன்.

இவ்வுலகில் பிறந்த அனைவரும் தனித்தன்மைகள் படைத்த திறமைசாலிகளே. நம்மில் புதைந்துக் கிடக்கும் திறமைதனை நாம் வெளிக்கொணர்வதில்லை. மாறாக மற்றவரோடு நமது வாழ்வினை ஒப்பிட்டு பார்த்து, நம் அன்றாட வாழ்க்கையின் மகிழ்ச்சியை தொலைத்து விடுகிறோம். மகிழ்ச்சி என்பது நாம் பெரிதாக சாதிக்கும் விடயங்களில் மட்டுமே இருப்பதில்லை. நாம் செய்யும் சிறு சிறு காரியங்களிலும் மகிழ்ச்சி இருக்கிறது. அதனால் நாம் தான் அவற்றைக் கண்டுக் கொள்வதே இல்லை.

உதாரணமாக நீங்கள் கோவிலுக்கு செல்கிறீர்கள். அனைவருக்குமே உண்டியலில் காசு போடும் பழக்கம் இருக்குமல்லவா, அப்போது, நீங்கள் ஏதேனும் மகிழ்ச்சியை உணர்ந்திருக்கிறீர்களா? அல்லது, நீங்கள் உண்டியலில் செலுத்தும் பணம் கடவுளை சென்றடைகிறது என்று உங்களுக்கு தெரியுமா? இல்லையெனில் கடவுள் உங்களிடம் நேரிலோ கனவிலோ வந்து அவருக்கு பணம் தேவைப்படுவதாக கூறியிருக்கிறாரா? இல்லை, அதற்கு பதிலாக கோவில் வாசலில் கடை அமைத்திருக்கும் சிறு தொழிலாளர்களிடம் பூசைப் பொருள் வாங்கி பாருங்கள்.

உங்களால் அவருக்கு ஒரு சிறிய வருமானம் கிடைத்ததென்ற மகிழ்ச்சி உங்கள் மனதில் இருக்கும். அதேபோல், அந்த கோவில் வாசலில் அமர்ந்து பிச்சை எடுக்கும் வயது முதிர்ந்தவர்களுக்கு உங்களால் முடிந்த உதவியை செய்துப் பாருங்கள். அவர்கள் மனதார வாழ்த்தும் அந்த வார்த்தையில் கிடைக்கும் மனமார்ந்த மகிழ்ச்சி.

இதனை வெறும் வார்த்தைக்காக கூறவில்லை. என் வாழ்வில் நான் உணர்ந்த மகிழ்ச்சியினைத் தான் உங்களோடு பகிர்ந்துக் கொள்கிறேன். எல்லா நாட்களும் நீங்கள் இதனைச் செய்ய வேண்டுமென்பதில்லை.

உங்களால் இயலும்போதேல்லாம் செய்தால் மட்டும் போதும். இதுபோன்று பல விடயங்களில் நம்மை அறியாமலே நாம் சிறு சிறு மகிழ்ச்சியினை அடைந்துக் கொண்டு தான் இருக்கிறோம். பலர் கை நிறைய பணம் சம்பாதிப்பதும் நான்கு சக்கர வாகனம் வைத்திருப்பதும், பங்களா வைத்திருப்பதும் தான் வாழ்க்கையின் மகிழ்ச்சி என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். என்று நாம் பணம் தான் மகிழ்ச்சி என்று நினைக்கிறோமோ அது பயத்துடன் கலந்த மகிழ்ச்சியாகத் தான் இருக்கும்.

ஆம் வாங்கிய பொருட்களைப் பாதுகாக்கும் பயத்திலேயே நம் மகிழ்ச்சியை இழக்கிறோம். உங்கள் பிள்ளைகளுக்கும் பணம்  சம்பாதிப்பது எப்படி என்று கற்றுக்கொடுக்காமல், மகிழ்ச்சியாக வாழ்வது எப்படி என்பதையும் கற்றுக்கொடுங்கள். பிறந்த நாளன்று சக மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இனிப்புக் கொடுத்து மகிழ்வதைக் காட்டிலும், உணவில்லாது வாடும் நால்வருக்கு உணவளிப்பதில் கிடைக்கும் மகிழ்ச்சியினை கற்றுக்கொடுங்கள் அல்லது நான்கு மரங்களை நடச்செய்து அவை வளர்ந்தபின் அளிக்கும் பலனின் மகிழ்ச்சியினை உணரச் செய்யுங்கள்.

இதில் பார்த்தோமானால், மிக்க வசதிப் படைத்தவரும் ஏதோ ஒரு வகையில் மகிழ்ச்சியாக இருப்பார், ஏழ்மையானவரும் எவற்றையும் பற்றி கவலைப்படாமல் அன்றாட வாழ்வில் வரும் வருமானத்தைக் கொண்டு மகிழ்ச்சியாகவே வாழ்கின்றனர். இவற்றில் பாதிக்கபடுவதோ நம்மை போன்ற நடுத்தர வர்க்கத்தினரே. நாம் தான் மற்றவரைப் பற்றிக் கவலைப்பட்டு வசதியாக வாழ்வது போல் காட்டிக் கொள்ள நினைத்து நம் வாழ்வின் மகிழ்ச்சியினைக்  குலைத்துக்கொள்கிறோம்.

மாத தவணைக் கட்டுபவர்களுக்கு இந்த வலி புரியுமென்று நினைக்கிறேன். அதனால் எப்போதுமே கடவுள் நமக்கு கொடுத்திருக்கும் இந்த அற்புதமான வாழ்க்கையினை தினந்தோறும் மகிழ்ச்சியாக கொண்டாடுங்கள். இந்த வாழ்க்கைக்காக நன்றி கூறுங்கள். ஏனெனில் பலர் நமக்கு கிடைத்திருக்கும் வசதி கூட இல்லாமல் இருப்பதை காணமுடிகிறது. பல இடங்களில் மக்கள் எந்தவொரு வாழ்வாதாரமும் இன்றி தெரு ஓரங்களில் உறங்கும் நிலைகளையும் காண நேர்கிறது. இவ்வுலகில் எதுவுமே நிரந்தரமானவையல்ல. இதனை புரிந்துக் கொண்டோமானால் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வையும் அனுபவித்து மகிழ்வோம். எப்பேர்பட்ட வசதி படைத்தவரும் சில இயற்கை சீற்றங்களில் உடமைகளற்று உறவுகளற்று தவித்ததையும் நாம் பார்த்திருக்கிறோம்.

ஆகையால், வாழ்வில் நிகழும் எல்லா நிகழ்வுகளையும் மகிழ்ச்சியோடு எதிர்கொள்ளுங்கள். உங்கள் துன்பமும் இன்பமாக மாறும் வாய்ப்பு உள்ளது. இதனை தான் ''துன்பம் வரும் வேளையிலும் சிரிங்க'' என்று கூறி வந்தனர். ''மகிழ்ச்சியை'' மற்றவரிடத்தில் தேடுவதை விட்டுவிட்டு உங்களிடமிருக்கும் மகிழ்ச்சியை மற்றவரோடு பகிர்ந்துக் கொள்ளுங்கள். அது இரட்டிப்பாகும். இன்று முதல் மகிழ்ச்சியோடு வாழுங்கள், வாழ்வின் எல்லா வளங்களும் பெற்று.

**- மகாலெட்சுமி சிவானந்தம்**

# முன்னோர்கள் முட்டாள் இல்லை



மணிபாரதி தங்க சுந்தர்

நம் முன்னோர்கள் அறிவியல் ரீதியாக முன்னெடுத்த பல விடயங்களை நாம் நாகரிக வளர்ச்சி என்ற பெயரில் மூடநம்பிக்கையாக சித்தரித்து கேலி செய்து சிதைத்து வருகிறோம். அவர்கள் வாழ்ந்த சூழ்நிலைக்கேற்ப பாதுகாப்பான வாழ்விற்காக அவர்கள் உருவாக்கிய முறை இப்போதைய சூழ்நிலையில் உகந்தது அல்ல என்பதே பலரின் கருத்து. ஆனால் அவர்கள் முன்னெடுத்த விடயங்களுக்கு மத்தியில் இப்போது இருக்கும் நாகரிக வளர்ச்சி என்பது அவர்கள் கால் தூசிக்குச் சமம்.

அவர்கள் செயல்படுத்திய விடயங்களில் உள்ள மெய் ஞானம் பற்றி சிலவற்றைப் பார்ப்போம்.

1)திருஷ்டி கயிறு எனும் முதலுதவி

வீட்டு வாசலில் திருஷ்டி கயிறு என ஒன்று கட்டப்படுகிறது. இது ஏன் என்றால் திருஷ்டிபடாமல் இருப்பதற்கு என்று பலர் கூறுகிறார்கள். ஆனால் இதன் உண்மை காரணம் அதுவல்ல. நம் முன்னோர்கள் அதை முதலுதவிக்காகத் தான் பயன்படுத்தினார்கள். அவர்கள் வாழ்ந்த காலத்தில் வீடுகளின் எண்ணிக்கை காடுகளின் எண்ணிக்கையை விட குறைவு. இரவு நேரங்களில் விசப் பூச்சிகள் தீண்டும் பொழுது வீட்டிற்கு சென்று முதலுதவி பொருள்களைத் தேடுவதற்குள் இறந்து போக நேரிடும். அந்நேரத்தில் தம்மைத் தாமே தற்காத்துக் கொள்ள தயார் செய்யபட்டது தான் இந்த திருஷ்டி கயிறு. அதில் எழுமிச்சை, தேங்காய் மற்றும் மிளகாய் வைத்திருப்பார்கள். முதலில் கை கால்களில் கடி என்றால் அதில் இருக்கும் கயிற்றை எடுத்து கட்டி கொள்வார்கள். பிறகு மிளகாய் எடுத்து குடிப்பார்கள். மிளகாயின் காரம் தெரியவில்லை என்றால் விஷப் பூச்சிகள் என்றும் காரம் தெரிந்தால் சாதாரண பூச்சி என்றும் தெரிந்துக் கொள்வார்கள். களைப்பைப் போக்க எலுமிச்சைச் சாறு பருகுவார்கள். எழுமிச்சை மற்றும் தேங்காய் துண்டுகளில் உள்ள மஞ்சளை எடுத்துக் காயப்பட்ட இடத்தில் பூசிக் கொள்வதற்கும் பயன்படுத்தி உள்ளார்கள். எட்டுக்கால் பூச்சி கடி என்றால் தேங்காய் தண்ணீர் மற்றும் தேங்காய் சாப்பிடுவதன் மூலம் விஷமுறியும் வாய்ப்பு உள்ளது.

2)பாம்பு(கரையான்)புற்றில் பால் ஊற்றுவது

பாம்பின் நாக்கு பிளவுபட்ட அமைப்புடையது. அதனால் ஒரு பொருளை உறிஞ்சிக்

குடிக்க முடியாது. இது அறிவியல் ரீதியான உண்மை. அப்படி இருக்க நம் முன்னோர்கள் ஏன் பாம்பு(கரையான்) புற்றுக்கு பால் மற்றும் முட்டை ஊற்றினார்கள்? அதன் பின் அறிவியல் பூர்வமான விடயம் உள்ளது. அவர்கள் வாழ்ந்த காலத்தில் பாம்புகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்திருக்கிறது. தினம் தினம் அச்சுறுத்தலைச் சந்தித்துள்ளனர். பாம்புகளை முற்றிலுமாக அழிப்பது என்பது முடியாத விடயம். அதனால் அவற்றின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்காக அவர்கள் இச்செயலைச் செய்தனர். பாம்பின் இனப்பெருக்க நேரத்தில் பெண் பாம்பானது ஒருவித வாசனையை வெளிப்படுத்தும். அதை நுகர்ந்து, ஆண் பாம்பானது பெண் பாம்பைத் தேடி வந்து இரண்டும் கலந்து முட்டையிட்டு அடுத்த சந்ததியை உருவாக்கும். இது தான் பாம்பின் வாழ்வியல் முறை. இந்த சுழற்சியைத் தடுக்க இந்த செயலை செய்துள்ளனர். பெண் பாம்பு வெளியிடும் வாசனையைத் தடுக்கும் சக்தி பால் மற்றும் முட்டைகளில் மட்டும் தான் உள்ளது. எனவே இதை கரையான் புற்றில் ஊற்றினார்கள். பாம்பின் உடல் வெப்ப நிலை 35ஓ செல்சியஸ் என்பதால் பாம்பு எப்பொழுதும் கரையான் புற்றுகளில் தான் குடியேறும்.

3) திருமணத்திற்கு மஞ்சள் தாலி ஏன்?

பொதுவாக மஞ்சள் மிகச்சிறந்த கிருமிநாசினி என்பது அனைவரும் அறிந்த ஒன்று. திருமணமான பெண் அடுத்த மூன்று மாதத்தில் ஒரு கருவைச் சுமக்க தயார் ஆகிறார். அப்போது எண்ணற்ற நோய் தொற்றுகளைச் சந்திக்க நேரிடும். இதனால் தாய்,சேய் இருவரும் பாதிப்பு அடைய வாய்ப்புகள் உண்டு. இதை தடுக்கவே மஞ்சள் தாலி பயன்படுத்தினர். திருமணத்தின் போது மூன்று முடிச்சுகள் இடுவது எதற்காக என்றால் அப்போது தான் தாலி மார்பகத்தின் மையப்பகுதியில் இருக்கும். பெண்கள் குளிக்கும் போது தாலியில் மஞ்சள் தடவுவது வழக்கம். கடந்த பத்தாண்டுகளுக்கு முன்பு எத்தனை பேருக்கு மார்பக புற்றுநோய் இருந்தது என்றும் இப்போது எத்தனை பேருக்கு இருக்கிறது என்றும் கணக்கிட்டால் இதன் உண்மை புரியும். மேலும் அப்போது எத்தனை சுகப்பிரசவம் ஆனது! இப்போதைய சூழ்நிலையில் சுகப்பிரசவம் என்றால் ஆச்சரியமாக பார்க்கும் அளவிற்கு மாறிவிட்டது. இதற்கு காரணம் நாகரிக வளர்ச்சி என்ற மாயவலையில் நாம் மாட்டிகொண்டது தான்.

4) மெட்டி அணிவது ஏன்?

திருமண நிகழ்வில் மணமகளின் கால் விரலில் மெட்டி எனும் அணிகலன் ஒன்று அணிவது வழக்கம்.கால் விரல் நரம்பு, கருப்பை நரம்புடன் தொடர்பு உடையது. கருவுறும் சமயத்தில் கருப்பையின் அதிர்வலைகளை கட்டுப்படுத்தவே இதை அணிந்தனர்.மேலும் மெட்டியை வெள்ளியில் அணிவது சிறந்தது. ஏனெனில் வெள்ளியில் இருக்கும் காந்த சக்தி அதிர்வலைகளை கட்டுப்படுத்தும். கருவுற்ற நேரத்தில் பெண்களுக்கு ஏற்படும் வாந்தி, மயக்கம்,சோர்வு ஆகியவற்றை மெட்டி அணிவது மூலம் ஓரளவு கட்டுப்படுத்த முடியும் என்பது மருத்துவ ரீதியான உண்மை.

இதுபோல் தான் மோதிரம் அணிவதும். இடது கை மோதிர விரல் நரம்பு, இதயத்துடன் நேரடி தொடர்பு உடையது. திருமணத்தின் போது மோதிரம் அணிவது உன்னை இதயப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன் என்பதற்கு அடையாளமும் கூட.

5) வளைகாப்பு நிகழ்வு

கருவுற்ற பெண்களுக்கு வளைகாப்பு என்ற ஒரு நிகழ்வு நடைபெறுவது தெரியும். ஆனால் அது ஏன் ஏழாம் மாதத்தில் தான் நடைப்பெற வேண்டும் என கட்டமைக்கப்பட்டது?

ஏழாம் மாதம் என்பது, தாய்க்கும் சேய்க்கும் மூன்று மாத கணக்கில் மூன்றாம் மாத சுழற்சி நேரம். இந்த நேரத்தில் இருவரின் பாதுகாப்பு மிக முக்கியமான ஒன்று. இந்நேரத்தில் கணவன்,மனைவி இணைந்தால் குழந்தையின் தலை திரும்பிக் கொள்ள மற்றும் மூளை வளர்ச்சிக் குன்ற அதிக வாய்ப்பு உள்ளது என்பது மருத்துவத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே தான் ஏழாம் மாதத்தில் வளைகாப்பு செய்து பெண்களை அவர் பிறந்த வீட்டிற்கு அனுப்பும் பழக்கம் கடைபிடிக்கப்படுகிறது. வளைகாப்பு நேரத்தில் குழந்தை பெற்ற பெண்களை அழைத்து கருவுற்ற பெண்ணிற்கு வளையல் இட செய்வதன் மூலம் ‘‘எங்களை பார் நாங்கள் பிள்ளைகள் பெற்று நலமாக தான் இருக்கிறோம்.. உனக்கு அதுபோல நலமாக பிரசவம் நிகழும்‘‘என நம்பிக்கை தருவதற்காக உருவாக்கபட்ட ஒன்று.அந்த நம்பிக்கையில் தானே அக்காலத்தில் மருத்துவர்,மாத்திரைகள் இல்லாமல் பல சுகப்பிரசவங்கள் நிகழ்ந்தன. வளையல்கள் அணிவிப்பது ஏன் என்றால் வளையல் அணிவிக்கும் போது கை விரல்களைக் குவித்து வைத்திருப்பதால் எளிதாக செல்லும், பிறகு சற்று கடினமாகி பின் எளிதாக கைகளுக்குள் சென்று விடும். பிரசவமும் இப்படி தான் என்பதை குறிப்பாக உணர்த்தவே இம்முறை. மேலும் வளையல் ஒலி கருவில் இருக்கும் குழந்தைக்கு நல்ல தாலாட்டாகவும்,நம் அன்னை நம்முடன் இருக்கிறாள் என்ற பாதுகாப்பு உணர்வை தரும் என்பது சமீபத்தில் நிரூபிக்கபட்டது...

6) பாரம்பரிய உடை:(பாவடை தாவணி, சேலை மற்றும் வேட்டி)

பாவடை தாவணி மற்றும் சேலை என்பது தமிழர்களின் பாரம்பரிய உடை. சமீபகாலமாக அவை நம்மை விட்டு அகற்றப்பட்டு வருகிறது. காரணம் என்ன என்று கேட்டால் பாவாடை தாவணி வடிவமைப்பில் இடுப்பு பகுதியில் துணியில்லாதது கவர்ச்சியாக உள்ளது என்பது பலரின் கருத்து. சற்று சிந்தித்துப் பாருங்கள், பாவாடை தாவணி அணிந்த காலத்தில் பாலியல் வன்கொடுமைகள் எத்தனை நிகழ்ந்தன? இப்போது எத்தனை நிகழ்கிறது? சரி இந்த பாவாடை தாவணி ஏன் இவ்வாறு வடிவமைக்கப்பட்டது? மரப்பாச்சி பொம்மை என்றாலும் அதற்கு மாராப்புக் கட்டி விளையாட சொல்லித் தந்த மானமிகு இனம், தன் வீட்டுப் பெண் தேவதைகளின் மானத்தை பாதுகாக்க தவறுகிறது என்று பிறர் சொன்னதை நம்பியது நம் மடத்தனம்

தானே. ஏன் அவ்வாறு வடிவமைத்தார்கள்?
பெண்களின் கருப்பை தன் அதிகபட்ச வெப்பநிலையை விட உயரும் போது தன்னை குளிர்விக்க தனக்குள்ளே நீர்க்கட்டிகளை உருவாக்கிக் கொள்ளும். இவையே கருப்பைக் கட்டிகளாக உருமாறும். கருப்பை இறக்கமும் ஏற்படும்.இடுப்புப் பகுதியைத் துணிகள் கொண்டு மறைக்கும் போது கருப்பையின் வெப்பநிலை உயர்கிறது. இதை தவிர்க்கவே பாவாடை தாவணி உடை அவ்வாறு வடிவமைக்கப்பட்டது. அக்காலத்தில் கருப்பை பிரச்சினை எத்தனை பேருக்கு இருந்தது, நாகரிக வளர்ச்சியில் இன்று எத்தனை பேருக்கு இல்லாமல் இருக்கிறது என்று எண்ணிப் பார்த்தால் இதன் உண்மை புரியும்.

வேட்டி ஏன் என்றால் பொதுவாக ஆண்கள் சந்திக்கும் முக்கியமான பிரச்சினை குடல் இறக்கம். இதை தவிர்க்கவே வேட்டி உடுத்தப்பட்டது. அரைஞாண் கயிறும் குடல் இறக்க பிரச்சினை வராமல் தடுக்கவே என்பதைப் புரிந்துக் கொள்ள வேண்டும்.

இது எந்த அளவிற்கு உண்மை என்பதை ஆராய்ந்து பார்க்க எனக்கு உடன்பாடில்லை. ஏனென்றால் உலகிற்கு அறிவை பரிசாக கொடுத்த இனம் அதன் வாழ்வியலை இவ்வாறு கட்டமைத்து இருக்கும் என்பது உண்மை என்றே நான் நம்புகிறேன்.

ஒரு உயிரினம் தன் அடிப்படை வாழ்வியலை விட்டு மாறும் போது அழிவைத் தான் சந்திக்கும். நாம் நம் வாழ்வியலை மறந்து மரணத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டு இருக்கிறோம் என்பது நிதர்சனமான உண்மை. பல் பிரச்சினைகளுக்கு தீர்வு என்ன என்று பலவழியில் கேட்டும் மருத்துவத்தில் பயனில்லை. ஆனால் நம் முன்னோர்கள் ‘‘ஆலும் வேலும் பல்லுக்குறுதி‘‘என பழமொழியில் மருத்துவத்தை சொன்னார்கள். நாம் எதை எல்லாம் அவமானம் என்று நினைத்தோமோ அது தான் நம்முடைய ஆகச் சிறந்த அடையாளம் என்று தற்போது காலம் நம் கண்முன்னே காட்டிக் கொண்டு இருக்கிறது.

எனவே தற்போதைய காலக்கட்டத்தில் அவர்கள் கட்டமைத்த வழிமுறைகளைப் பின்பற்ற முடியவில்லை என்றாலும் கேலி செய்து கேவலப்படுத்த வேண்டாம் என்பதே என் தாழ்மையான கருத்து. மீண்டும் உரக்க பதிவிடுகிறேன்.

✸நாம் இன்று பேசும் பகுத்தறிவு அவர்கள் கால் தூசிக்குச் சமம்✸

- மணிபாரதி தங்க சுந்தர்

# வெத்தல பாக்கு போயில போடுற பழக்கம் உண்டா?



செந்தில்குமரன்
மன்னார்குடி

இல்லீங்க.
பீடி, சிகரெட்?
இல்லீங்க.
கஞ்சா அடிப்பியா?
இல்லீங்களே.
கள்ள சாராயம்?
இல்லீங்களே.
பிராந்தி, விஸ்கி?
இல்லீங்க.
பொம்பள, கிம்பள?
வாடையே ஆகாதுங்க.
அப்புறம் என்ன மயிருக்குடா நீ நூறு வயசு வரைக்கும் இருக்கனும்னு கவுண்டமணி கேட்குறத நினைக்கும்போதெல்லாம் கெக்கபுக்கேனு சிரிக்குறோமே தவிர இதன் பின்னணியில் போலியாக உருவாக்கப்பட்டு இருக்கிறவற்றை பற்றி சிந்திப்பதில்லை.

பொதுவாக இந்த விடயங்கள் நம்மிடையே அடிக்கடி தயக்கத்தை உண்டு பண்ணும். மது அருந்துவதால் நாம கெட்டவனோனு நினைக்க வைப்பதும், குடிப்பதில்லை என்பதால் நம்மள பழம்னு நினைப்பாங்களோனு நினைக்க வைப்பதும் வாழ்க்கையின் எதார்த்தம்.

இப்படி தான் ஒரு நாள், நண்பர் ஒருவர் என்னிடம் கேட்டார், நான் பழச்சாறு அருந்துகிறேன், அது ஒன்னும் தப்பில்லையே என முழித்தார். இல்லையேன்னு சொன்னேன். கொஞ்சம் லேட்டா புளிச்ச அப்புறமா தண்ணீரும் சேர்த்து குடிச்சா? னு கேட்க, தப்புலா இல்லீங்களே, குடிக்கலாமே என்றேன். ஆனா இதை தான் நம்ம அரசு, கடைகளில் மது என்ற பெயரில் விற்பனை செய்கிறார்கள், அதை குடிச்சா மட்டும் கொலை பண்ணிட்டு வந்த மாதிரி பார்க்கறீங்க, இப்படி குடிச்சா மட்டும் தப்பில்லை னு சொல்றீங்கனு கேட்டதும் எனக்கு அப்படியே ஒரு நிமிசம் தலையே சுத்திடுச்சு.

சுதாரித்துக் கொண்டு, ஒரு கை மண்ணை அள்ளி உங்க தலையில போட்டா வலிக்குமா என்றேன், வலிக்காது என்றார். அதுல தண்ணீர் கலந்து ஊத்துறேன் அப்ப?, வலிக்காதுப்பா. இரண்டையும் கலந்து சுட்ட செங்கலாக்கி உங்க நடு மண்டைல போடுறேன், அப்ப என்ன ஆகும்னு சொல்லி முடிக்கிறதுக்குள் நான் மண்டைய போட்ருவேன் தம்பி என்றார்.

அப்படிதாங்க இந்த மதுவும், மதுவை உருவாக்குகிற விதமும். கைப்பிடி அளவுடன் இருந்துச்சுனா பிரச்சினையில்லை. டாக்டர் கொடுக்கிற சிரப்-ல ஆல்கஹால் இருக்குனு ஒரு பாட்டில் ஆல்கஹால் வாங்கி குடித்தீர்கள் என்றால் குடல் வெந்து தான் சாகனும்.

இந்த அளவு ஆல்கஹால் உடலுக்கு ஒன்றும் செய்யாது என்று வரையறுத்துப் பொதுவாக சொல்ல முடியாது. ஒருவரது உடலமைப்பு, வாழும் தட்பவெப்பச் சூழலைப் பொறுத்து மாறுபடும். அதைப் பற்றிக் காண்போம்.

அரசாங்கத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டு கோதுமைப் பாக்கெட்டு மாவுகளில் மிருதுவான சப்பாத்திக்காக கலக்கப்படுகின்ற ஈஸ்ட்களால் புளிக்க செய்யப்படும் எத்தனால் மூலக்கூறு தான் ஆல்கஹால். திராட்சை அல்லது பேரிச்சம்பழத்தில் இருந்து எடுத்தால் ஒயின், கோதுமை, கம்பு மற்றும் நெல்லில் இருந்து எடுத்தால் பீர், அதையே பல முறை வடிகட்டி எடுத்தால் வோட்கா. இவையாவும் கார்போஹைட்ரேட்டுகள் நிறைந்தவை. இது தான் தரமானது. இந்த சுவை பாண்டிச்சேரி சரக்குகளில் இருக்கும். நம்மூரில் குறையும், காரணம் எல்லாருக்கும் தெரியும்.

<u>ஆல்கஹாலும் மூளையும்</u>
அளவுக்கதிகமாக ஆல்கஹால் எடுத்துக் கொண்டால் பல பாதக விளைவுகளை மூளைக்கு ஏற்படுத்தும். அம்னீசியா, டிமென்சியா போன்ற மூளை நரம்பியல் பிரச்சனைகளை உருவாக்கும்.

<u>ஆல்கஹாலும் மன அழுத்தமும்</u>
மன அழுத்தத்தைக் குறைப்பதற்காக குடிக்கிறேன் என சொல்பவர்களுக்கு, ஆல்கஹால் சில மணி நேரங்கள் தான் பயனளிக்கும். ஆனால் முழுவதுமாக மன நோயாளியாக்கி விடும் ஆற்றலும் உண்டு ஆல்கஹாலுக்கு.

<u>ஆல்கஹாலும் உடல் எடையும்</u>
உயர் ஊட்டச்சத்து மிக்க பொருளாக ஆல்கஹால் அதிகபட்சமாக இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது. அதாவது ஒரு கிராமில் 7 கலோரி வரை அடங்கியுள்ளது.

பீர் குடித்தால் குண்டாகி விடுவார்கள் என்பது உண்மை. ஆனால் இது ஒருவர் குடிக்கும் பழக்கத்தைப் பொறுத்து மாறுபடுகிறது. அதே போல் சிவப்பு ஒயின் உடல் எடையைக் குறைக்கிறது.

<u>ஆல்கஹாலும் இருதயமும்</u>
அவரவர் உடலுக்கேற்ப குறிப்பிட்ட அளவு ஆல்கஹால் எடுத்துக் கொள்வது, இருதயத்துக்கு நல்லது. இரத்தத்தில் நல்ல கொழுப்புகளை அதிகரிக்க செய்கிறது. உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது. இரத்தம் உறைதலைக் குறைக்கும் ஃபிரினோஜேன் அளவைக் கட்டுப்படுத்துகிறது.

இப்படியே ஆல்கஹாலும் இரைப்பையும், ஆல்கஹாலும் கையும் காலும்னு எழுதிக் கொண்டே போனாலும், அளவுக்கதிகமாக இவற்றை எடுத்துக் கொள்ளும்போது, உடலுக்குத் தீங்கு விளைவிப்பதோடு, சமுதாயத்தில் உங்களுக்கு இருக்கிற மரியாதைக்கும் வேட்டு வைக்கிறது.

இதையே தான் ஆபிரகாம் லிங்கன், ஆல்கஹால் பயன்படுத்துவது கெடுதல் இல்லை என்பதோடு, ஒரு நல்ல விசயத்தைக் கெடுப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது என கூறி இருக்கிறார்.

அந்த காலத்தில் புளிச்ச மோர், தயிர், கம்மங்கூழ், கேப்பைக்கூழ் என்று ஈஸ்ட்டையும், நீரையும், அதோடு சேர்த்து உணவையும் உட்கொண்டு உடலுக்கு நல்ல வேலை கொடுத்து வந்ததனால் உடலுக்கு கேடும் இல்லை, போதையும் இல்லை. ஆனால் உடலுக்குத் தேவையான ஆல்கஹால் இயற்கையாகவே கிடைத்தது. அதனால் மதுவுக்கு அடிமையாகவுமில்லை, அறிமுகமாகவுமில்லை.

தெளிவாகிக் கொள்ளுங்கள் நீங்களே.

**இரா. செந்தில் குமரன்**
மன்னார்குடி

## மறை‘‘முகம்’’

புருவ வில்களுக்கு மை நீட்டி!
மத்தியில் அம்புப் பொட்டு வைத்து!
விழியோர வெறுமை போக்க
கருமை பூசி!
சாயம் கொண்டு
செவ்விதழை உண்மையாக்கி!

மாவு கொண்டு
முகத்தை மதியாக்கி!

தன் பிம்பத்தைக் கண்ணாடியில் ரசித்தவாறே
‘‘பர்தா ’வை வெளிப்படையாக மூடி
மறை‘‘முகம்‘‘ ஆகிறார்
அந்த இசுலாமிய சகோதரி!!!

## அமாவாசை

நிலாச்சோறு ஊட்ட
நினைத்த
அம்மாவின் ஆசை
நிராசை ஆனது .
‘‘அமாவாசை’’ ...!!!



செந்தில் பக்கிரிசாமி
மன்னை

# களம் காணாமல் காவிரி கிடைக்காது


இராசசேகரன் மன்னை

காவிரி நீர் உரிமை மறுக்கப்பட்டு தமிழரையும் தமிழர் நிலத்தையும் அழிக்கும் திட்டம், இன்று நேற்றல்ல! மொழிவாரி மாநில பிரிப்பிலிருந்தே தொடங்கிவிட்டது. அன்றே தமிழகத்திற்கான நீர் பிடிப்பு பகுதிகளான பாலாறு ஆந்திராவுடனும், முல்லைப்பெரியாறு கேரளாவுடனும், காவிரி கர்நாடகாவுடனும் வஞ்சகமாக பிரித்து கொடுத்துவிட்டு இன்று வரை கையேந்தி உரிமையை கேட்கும் நிலையிலேயே தமிழினத்தை வைத்துள்ளனர்.

இதில் காவிரி தமிழகத்தின் இருபது மாவட்டங்களின் குடிநீராதாரம், பனிரெண்டு மாவட்டங்களின் உழவு நீராதாரம். தமிழகத்தின் 75% நீர் தேவையைப் பூர்த்தி செய்வது காவிரி மட்டுமே. அதுமட்டுமின்றி காவிரிப்படுகை என்பது அமெரிக்காவின் ரிவர் பேசின் சமவெளிக்கு அடுத்து உலகின் இரண்டாவது பெரிய சமவெளி.

ஆனால் அமெரிக்க ரிவர் பேசின் சமவெளி பகுதி தானே தவிர,அங்கு உழவு தொழில் மேற்கொள்ளப்படவில்லை, அது விழல் நிலமாகவே உள்ளது.ஆனால் காவிரிப்படுகை முழுவதும் உழவு சிறந்து விளங்கி அப்பகுதி மக்களின் வாழ்வியலோடு கலந்து உள்ளது. மேலும் இந்தியாவின் நெற்களஞ்சியம் என்றழைக்கப்படுகிற தஞ்சையின் தாய்மடி காவிரிப்படுகை. இந்தியாவின் அரிசி தேவையின் பெரும்பகுதியை பூர்த்தி செய்து வந்த நிலம், இன்று காவிரி நீரில்லாமல் வறண்டு அழிவின் விளிம்பில் இருக்கிறது.

காவிரி உரிமையை மீட்க தமிழினமும் பல ஆண்டுகளாக போராடி வருகிறது. ஆனால் எந்த இடத்திலும் தமிழர்களுக்கான நீதி காக்கப்பட்டதாக வரலாறு இல்லை. அனைத்து இடங்களிலும் ஏதோ ஒருவகையில் மறைமுகமாக கர்நாடகத்திற்கு ஆதரவாக செயல்பட்டு கழுதை தேய்ந்துக் கட்டெறும்பான கதையாக 177.25 ஆமிக அளவில் வந்து நிற்கிறோம். அந்த குறைந்தபட்ச உரிமையை கொடுக்க கூட இந்திய ஒன்றியத்திற்கு மனமில்லாமல் வார்த்தை விளையாட்டுகளால் சட்டத்தின் சந்துகளில் நுழைந்து அதிகார வலிமையை உட்செலுத்தி இந்திய ஒன்றியத்தின் உயரிய அமைப்பான நீதித்துறையையே தனது குரலாக தீர்ப்பெழுத வைக்கிறது.

காவிரி சிக்கலில் நடுவர் மன்ற தீர்ப்பின் தொடர்ச்சியான உச்சநீதிமன்ற இறுதி தீர்ப்பில், நடுவர் மன்ற தீர்ப்புகளை அனைத்தையும் குப்பையில் போட்டுவிட்டு தமிழகத்திற்கு 177.25 ஆமிக தண்ணீரை காவிரியில் இருந்து கர்நாடகம் கொடுக்க வேண்டும். அதற்கு நடுவர் மன்றம் கூறிய வழிக்காட்டுதல்களில் திட்டம் ஒன்றை ஆறு வாரத்தில் இந்திய

ஒன்றிய அரசு தாக்கல் செய்ய வேண்டும். இந்த தீர்ப்பில் இதற்குமேல் எந்த மேல்முறையீட்டிற்கும் அனுமதி இல்லை. அதையும் மீறி மேல்முறையீடு செய்தால் வழக்கு தள்ளுபடி செய்யப்படும் என்று கூறிய நீதிபதிகளே ஆறுவாரம் முடிந்து திட்ட அறிக்கையை தாக்கல் செய்யாமல் திட்டம் என்பதற்கான விளக்கத்தை கேட்டு இந்திய ஒன்றியம் கேட்ட மேல்முறையீட்டு மனுவை ஏற்று இன்றுவரை நடத்திக் கொண்டிருக்கிறது.

கர்நாடக தேர்தலைக் காரணம் காட்டி மேல்முறையீடு செய்தாலும் அவர்களின் நோக்கம் காவிரி நடுவர் மன்றத்தில் கூறியுள்ளபடி, இந்திய ஒன்றியத்தின் அரசிதழில் வெளியிடப்பட்ட காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் ஒழுங்காற்று குழு இரண்டையும் அமைத்தாக வேண்டிய சட்ட வலுவை இல்லாமல் செய்வதாகவே இருந்தது. இதை எவரும் பேசக்கூடாது என்பதற்காகவே நமது கவனம் கோபம் அனைத்திற்குமான வடிகாலாக கர்நாடக தேர்தலைக் காரணம் காட்டிவிட்டு காவிரி நீர் வரவேண்டிய மதகை அடைத்துவிட்டது.

இறுதியாக மே 14 அன்று உச்ச நீதிமன்றத்தில் இந்திய ஒன்றிய அரசு ஒரு பெயர் வைக்காத வரைவு அறிக்கையை தாக்கல் செய்துவிட்டு, அதில் திருத்தம் செய்ய உச்ச நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்றும், வேண்டுமானால் இந்த அறிக்கைக்கு வாரியம், திட்டம், அல்லது குழு என்று பெயர் வைக்கும் உரிமையை மட்டும் உச்ச நீதிமன்றத்திற்கு கொடுத்துள்ளது. அதாவது இந்திய ஒன்றியத்தின் பிள்ளைக்கு உச்ச நீதிமன்றம் பெயர் வைக்கலாம் ஆனால் வளர்தெடுக்க முடியாது என்று உச்ச நீதிமன்றத்தின் மாண்பையே அழித்துவிட்டது. அதிலும் அந்த திட்டம் தான் வலிமையாக காவிரி நடுவர் மன்றம் பரிந்துரைத்தப்படி நாம் கேட்பது போன்று இந்திய ஒன்றியமோ, கர்நாடக அரசோ கட்டுப்படுத்தாத அளவிற்கு தன்னாட்சி அதிகாரம் கொண்டதாக இருக்கிறதா என்று பார்த்தால் அதுவுமில்லை.

காவிரி மேலாண்மை வாரியம் என்ற அதிகாரமிக்க வாரியத்தை அமைக்க மனமில்லாமல் காவிரி தண்ணீர் மேலாண்மை செயல்திட்டம் - 2018 என்ற பெயரில் பல் இல்லாத பாம்பை தலைகட்டுகிறது. காவிரி மேலாண்மை வாரியம் அமைத்தால் அணைகளில் தண்ணீர் திறந்துவிடும் அதிகாரம் வாரியத்தின் கட்டுப்பாட்டிற்கு வந்துவிடும்.

இதையே இங்கு பேசுகிற அரசியல் புலிகள், தமிழின விரோதிகள் அணைகளை நான்கு மாநிலங்களும் இந்திய அரசின் கட்டுப்பாட்டில் கொடுத்தால் தான் மேலாண்மை வாரியம் அமைக்க முடியும். ஆனால் எந்த மாநிலமும் அப்படி கொடுக்க தயாராக இல்லை என்று தவறான கருத்தை மக்கள் மன்றத்தில் வைக்கின்றனர். ஆனால் உண்மை அதுவல்ல, காவிரி நீர் பிடிப்புகளின் அணைகளின் மதகுகள் மட்டுமே வாரியத்தின் கட்டுப்பாட்டிற்கு வரும், அணைகள் அந்தந்த மாநிலத்தின் கட்டுப்பாட்டிலே இருக்கும். அதாவது தண்ணீரின் அளவை மேற்பார்வையிட்டு உரிய தண்ணீரை உரிய காலத்தில் திறந்துவிடும் அதிகாரம் மட்டுமே வாரியத்திற்கு உண்டு.

அணைகளின் பராமரிப்பு மற்றும் நிர்வாகம் அனைத்தும் அந்தந்த மாநிலத்தின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும். ஆனால் இன்று இந்திய ஒன்றியம் தாக்கல் செய்த செயல்திட்டத்தின்படி இந்த குழு,அணைகளை மேற்பார்வை செய்யும் தண்ணீர் திறந்து விட கூறும் மாநில அரசுக்கு, திறந்துவிட வேண்டும். அப்படி மாநில அரசு திறந்து விட மறுத்தால் அது இந்திய ஒன்றியத்தின் கட்டுப்பாட்டிற்கு வந்து அவர்கள் எடுப்பதே இறுதி முடிவு என்று கூறியுள்ளது. மேலும் இக்குழு விரும்பினால் அதன் பணிகளை தனியாரிடமும் கொடுக்கலாம் என்ற சலுகையும் வழங்கப்படுகிறது.

இவர்கள் தனியாரிடம் கொடுக்காலம் என்பதில் மறைமுகமாக இந்திய ஒன்றியம் அமல்படுத்த முயற்சி செய்து முடியாமல் இருக்கிற தண்ணீர் சட்டத்தின் மறைமுக ஆதரவாகவே தெரிகிறது. அப்படி தனியாரிடம் கொடுக்கப்பட்டால் நமக்கு வருகிற ஒவ்வொரு சொட்டுத் தண்ணீருக்கும் நாம் பணம் கட்டவேண்டிய நிலை கூட ஏற்படலாம். அதற்கு ஏதுவாகவே இந்திய அரசின் சட்ட திருத்தங்கள் அனைத்தும் இந்த குழுவின் விதிகளோடு நேரடியாக இணைத்துக் கொள்ளப்படும் என்று கூறுகிறது. அதன்படி, காவிரி மேற்பார்வை தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டு அதேநேரத்தில் இந்திய ஒன்றியம் தண்ணீர் சட்ட மசோதாவை நடைமுறைக்கு கொண்டு வந்தால் அதன் சரத்துகள் நேரடியாக காவிரி தண்ணீர் மேலாண்மை செயல்திட்டத்தோடு இணைந்து தனியார் கொள்ளைக்கு வழிவகுக்கும்.

இக்குழு மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டிய தண்ணீர் மேற்பார்வையோடு மட்டும் நிற்காது தண்ணீர் பயன்பாட்டிற்கான அனைத்து முறைகளிலும் தலையிடும். அதாவது கொடுக்கின்ற தண்ணீருக்கு தகுந்தாற்போல் பயிர்களை தேர்ந்தெடுப்பது, ஆற்று நீர் பாசனத்தின் அளவு, சொட்டு நீர் பாசனம் மற்றும் தொழிற்சாலைகளுக்குக் கொடுக்க வேண்டிய நீரின் அளவு என்று அனைத்திலும் தலையிடும் உரிமை வழங்கப்படுகிறது. இதில் தான் நமக்கு வலுவாக ஐயம் ஏற்படுகிறது.

நாளை இக்குழு சொட்டு நீர் பாசனம் தான் செய்ய வேண்டும் என்று பரிந்துரைத்தால் கேட்டுத் தான் ஆக வேண்டும். அதேபோன்று இந்திய ஒன்றியம், தண்ணீர் சட்டத்தை இயற்றி அதை தனியாரிடம் கொடுத்துவிட்டால் அந்நிறுவனம் ஒரு சொட்டிற்கு இவ்வளவு தொகை என்று நிர்ணயித்தால் அதனையும் உழவர் பெருங்குடி மக்கள் ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

அதைவிட கொடுமை என்னவென்றால் தொழிற்சாலைகள் மற்றும் வளர்ச்சி திட்டங்களுக்குத் தேவையான நீரைக் கொடுக்க சொல்லும் உரிமை குழுவிற்கு இருப்பதால் மீத்தேன் போன்ற திட்டங்களுக்கு தேவையான அபரிமிதமான தண்ணீரைக் கொடுக்க வேண்டும் என்றால் கொடுத்து தான் ஆகவேண்டும். கண்டிப்பாக இந்த நிலை ஏற்படும், காரணம் மீத்தேன் எடுப்பதற்கு கிணறு ஒன்றுக்கு குறைந்தது 15000 கன மீட்டர் நீர் தேவை. அப்படியென்றால் மொத்த திட்டத்தையும் செயல்படுத்த எவ்வளவு நீர் தேவைப்படும் என்பதை நீங்களே கணித்துக் கொள்ளுங்கள், அந்தளவிற்கு நிலத்தடி நீரும் தற்போது இல்லை.

ஆகவே காவிரி நீரைக் கொடுத்து அதனை வளர்ச்சி திட்டங்களுக்கான நீர் தேவை என்று மீத்தேன் திட்டத்திற்கு என்று ஒதுக்கவும் வாய்ப்பு உண்டு. அதை ஏற்க மறுத்தால்,குழு இந்திய ஒன்றிய அரசின் பார்வைக்கு கொண்டு செல்லும். ஒன்றிய அரசு கொள்கை முடிவின் அடிப்படையில் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று உத்தரவிடும், அப்படி உத்தரவிட்டால் அதை ஏற்றுத்தான் ஆக வேண்டும். காரணம், இந்திய ஒன்றிய அரசின் முடிவே இறுதியானது என்பதை திட்ட அறிக்கை கூறுகிறது. அதையும் மீறி தமிழக அரசும் மறுக்கும் என்று நீங்கள் நம்பினால் அதற்கும் வாய்ப்பில்லை. அந்த அளவிற்கு வலிமையான சட்டப்பாதுகாப்பு, இந்த திட்டங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

இப்படி பலவகையில் காவிரியை நெருக்குதலோடு கொடுத்து தமிழினத்தையும், தமிழர் நிலத்தையும் அழிக்கும் சூழ்ச்சிகளே நடக்கிறது. இதிலிருந்து இந்திய ஒன்றியம், தமிழகத்தைக் காப்பாற்றாது. காரணம், அதன் கண் அசைவில் மட்டுமே இதெல்லாம் நடக்கிறது. இத்தனை காலம் நீதிமன்றத்தை மட்டுமே நம்பினோம், அதுவும் இல்லை என்று உறுதியானது. தமிழகத்தை ஆளுகின்ற கட்சியைப் பற்றி கேட்கவே வேண்டாம். இவர்கள் இந்திய ஒன்றியத்தின் குரலாகவே இருக்கின்றனர்.

அதனை இன்று உச்ச நீதிமன்றத்தில் இந்திய அரசு தாக்கல் செய்த வரைவு அறிக்கையை பெற்றுக்கொண்டு வெளியே வந்த தமிழக சட்ட அமைச்சர் இதுவரை காவிரி சிக்கலை தீர்க்க எந்த அமைப்பும் இல்லாமல் இருந்ததது, தற்போது உருவாக்கப்பட்டதே பெரிய மகிழ்ச்சி என்கிறார். அறிக்கையில் தமிழகத்திற்கான சாதக பாதகங்களை கேட்கும் போது படித்து ஆலோசித்த பிறகு கூறமுடியும் என்கிறார். வெறும் பதினான்கு பக்க அறிக்கையை படிக்க இவர்களுக்கு எவ்வளவு நேரம் தேவைப்படப்போகிறது? துணை முதல்வர் வரைவு திட்டத்திற்குப் பாராட்டுத் தெரிவிக்கிறார்.

இவர்களின் அயோக்கியத்தனங்களை அம்பலப்படுத்த வேண்டிய மத்திய மாநில எதிர்கட்சிகள் கள்ளமௌனம் சாதிக்கின்றன. இன்னும் கட்சியே தொடங்காத தலைவர் ஒருவர், நதிகளை இணைத்தால் இந்த சிக்கல்கள் எல்லாம் தீர்ந்துவிடும் என்கிறார். கர்நாடகத்திடமிருந்து காவிரி உரிமையையே பெறமுடியவில்லை, இதில் நதிகளை இணைத்தால் மட்டும் அவர்கள் தமிழகத்திற்கு தண்ணீர் கொடுத்துவிடுவார்களா என்பதை அறிந்தும் போகாத ஊருக்கு வழிகாட்டி சுடுகாட்டிற்கு அழைக்கிறார்.

சிறு சிறு கட்சிகளும் இயக்கங்களும் மட்டுமே காவிரிக்காக போராடிக் கொண்டு வருகின்றன. அதற்கு மக்கள் நேரடியாக களத்திற்கு வராவிட்டாலும் ஆதரவு வலுவாக இருக்கிறது அதையும் சிதைக்க சமூக வலைத்தளங்களில் ஊட்டியில் அணை கட்டினால் கர்நாடகத்திற்கு தண்ணீரே செல்லாது என்று மடைமாற்ற முயற்சி மேற்கொள்கின்றனர். ஊட்டியில் இருந்து கர்நாடகத்திற்கு தண்ணீர் செல்வது உண்மை தான், ஆனால் மேற்கு

தொடர்ச்சி மலையில் மோதும் காற்று மேகத்தை குடகு பகுதியில் சேர்த்து மழையாக பொய்வதாலே குடகு காவிரியின் நீர் பிடிப்பு பகுதியாக இருப்பதை உணராமல் இந்த இரண்டு மூன்று ஆமிக அளவை தடுத்து நிறுத்த ஆலோசனை வழங்கப்படுகிறது.

அதேபோன்று தமிழக முதலமைச்சர் காவிரி உரிமையை மீட்க, எரியும் தீயை அணைக்க, கோதாவரி காவிரி இணைப்பு நீரை ஊற்றுகிறார். கோதாவரி காவிரி ஆறுகளை இணைத்தால் கல்லணைக்கு 100 ஆமிக கிடைக்கும் என்கிறார் முதல்வர்.

இதை தான் இந்திய நீர்வளதுறை அமைச்சர் நிதின்கட்காரி சில வாரங்களுக்கு முன்பு கூறினார். அதற்கு அடுத்த கனமே தெலுங்கானா முதலமைச்சர் சந்திரசேகர ராவ் தனது எதிர்வினையை அறிக்கையாக, கோதாவரி உபரி நீரை உடனடியாக கணக்கிட வேண்டும். தெலுங்கானவின் இன்றைய உபரி நீர் தேவை மற்றும் எதிர்கால தேவை அனைத்தையும் கணக்கிட்டு எங்கள் தேவை போகவே அண்டை மாநிலங்களுக்கு வழங்க முடியும்.

மேலும் இந்த நதிகளை இணைப்பதால் பல கிராமங்கள் அழியும். பல்லாயிரம் மக்கள் இடம்பெயர வேண்டும். அதுபோக இதனால் பயனடையும் பாசன பகுதிகள் ஏற்கனவே பாசன நீர் பெறுவதாகவே உள்ளது. ஆகையால் இத்திட்டத்தால் நாங்கள் பயனடைவதைவிட இழப்பதே அதிகம். ஆகையால் இந்திய ஒன்றியம் மாற்றுத் திட்டத்தை ஆலோசித்து முடிவெடுக்க வேண்டும் என்று கூறிவிட்டார். ஆக அதற்கும் வழியில்லை.

இப்படி எந்த வகையிலும் காவிரி உரிமையை பெற்றுத்தர எவரும் இல்லாத அரசியல் அனாதைகளாக தமிழக மக்களாகிய நாம் இருக்கிறோம். எக்காலத்திலும் இந்திய ஒன்றியத்திற்கு நமது அழிவை எடுத்துக் கூறி கோரிக்கை வைத்து கெஞ்சிக்கேட்டு புரியவைக்க முடியாது. கடுமையான போராட்டங்களை முன்னெடுத்து அவர்களை அச்சுறுத்தி பணிய வைக்க தான் முடியும். அதற்கான தளங்களை அனைத்து வழிகளிலும் உருவாக்க வேண்டும். எந்தெந்த வழிகளிலெல்லாம் போராட்டத்தை முன்னெடுக்க முடியுமோ அனைத்து வகையிலும் முன்னெடுக்க வேண்டும்.

காவிரியை மீட்கும் வரை அனைத்து அலுவல்களையும் ஒத்திவைத்துவிட்டு முழுமூச்சாக செயல்பட வேண்டும். நம்மை காப்பாற்ற எவரும் இல்லை என்றான பிறகு நாம் தான் நம்மை காப்பாற்றிக்கொள்ள வேண்டும். இந்திய ஒன்றியம் அஞ்சுகிற அளவிற்கு அவர்களுக்கு வருமான இழப்புகளை உருவாக்க வேண்டும். கிராமம் நகரம் மாநகரம் என்று இளைஞர்கள் மாணவர்கள் இணைய வேண்டும். மீண்டுமொரு ஒத்துழையாமை இயக்கத்தை இந்திய ஒன்றியத்திற்கு எதிராக கட்டமைக்க வேண்டும்.

ஒத்துழையாமை இயக்கம் என்றவுடன் சில அரைவேக்காடுகள் அனைத்து வரிகளும் இந்திய ஒன்றியம் பிடித்துக் கொண்டு தான் நமக்கு கொடுக்கிறது பிறகு எப்படி அவர்களுக்கு இழப்பு ஏற்படும் என்று போராட்ட வழிமுறைகளை அறியாமலே

சிறுபிள்ளைத்தனமாக பேசுகிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் அடிப்படை தேவை உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இடம் இவை மட்டுமே. உடையும் இடமும் அனைவரிடமும் இருக்கிறது. தேவையான அளவிற்கு மட்டுமே உணவு பொருட்களைச் சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும், அதுபோக எந்த வர்த்தகத்தையும் எவரும் செய்ய கூடாது.

அனைத்து பள்ளி கல்லூரிகளும் இயங்க கூடாது. மாணவர்கள் ஆசிரியர்கள் வகுப்புகளை புறக்கணிக்க வேண்டும். எந்த அரசு தனியார் நிறுவனங்களும் செயல்பட கூடாது, இதற்கு ஊழியர்கள் ஒத்துழைக்க வேண்டும். ஊடகத்தில் காவிரி தவிர்த்து எந்த பேச்சும் கேளிக்கையும் இருக்க கூடாது. அப்படியே இருந்தாலும் மக்களாகிய நாம் ஊடகங்களை தவிர்க்க வேண்டும். நாம் பார்த்தால் தான் அவர்களுக்கும் இந்திய ஒன்றியத்திற்கும் வருமானம். அவரவர் கணக்கில் வங்கியில் இருக்கும் அனைத்து பணங்களையும், நகைகளையும், சொத்துகளையும் எடுத்து விட வேண்டும். வங்கிகளின் பயன்பாட்டை முடக்க வேண்டும் முக்கியமாக வங்கிகளில் கடன் பெற்றவர்கள் திரும்பி செலுத்தக் கூடாது.

காவல்துறையினர் தங்களின் விசுவாசத்தை காவிரி உரிமை கிடைக்கும் வரை மண்ணுக்கும் மக்களுக்கும் காட்ட வேண்டும். கண்டிப்பாக வாகன எரிபொருள் பயன்பாட்டைத் தவிர்க்க வேண்டும். வெளியே செல்வது என்றாலும் பொது பயன்பாடான பேருந்து, தொடர்வண்டிகளை பயன்படுத்த வேண்டும், ஆனால் பயணச்சீட்டு வாங்க கூடாது. இப்படி எந்தெந்த வகையிலெல்லாம் முன்னெடுக்க முடியுமோ அனைத்து வகையிலும் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். மக்கள் சந்திக்கும் அனைத்து இடங்களும் போராட்ட களமாக மாறவேண்டும். நீரின்றி அழிந்து போவதற்கு பதில் தேவைகளைக் குறைத்துப் போராட்டத்தை வலுப்படுத்தி காவிரி உரிமையை மீட்டெடுத்தப்பிறகு நிறைவாக வாழலாம் என்ற நெருப்பு அனைத்து உள்ளங்களிலும் எரிமலையாக எரியவேண்டும்.

சட்டம், ஆட்சி அதிகாரம்
நாட்டின் இறையாண்மை
சனநாயகத்தின் பாதுகாப்புகள்
அனைத்தும் குடிமக்களின் நலனை மையப்படுத்தியே இருக்க வேண்டும்
மக்களுக்கே பாதிப்பு என்றால் அதனை
முறைப்படுத்தி ஒழுங்குபடுத்தும் வலிமை
மக்களுக்கு மட்டுமே உள்ளது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்தாக வேண்டும்.
நாம் நினைத்தால் மட்டுமே காவிரி நம்மை நனைக்கும்.

போராட வீதிக்கு வா தமிழா

**- இராசசேகரன் மன்னை**

# மருத்துவம் பற்றிய புரிதல்



ராணிச்சந்திரன்
மன்னார்குடி

1990 ல் எங்கள் மகனுக்கு சளியை வெளியேற்றம் செய்ய ஆங்கில மருத்துவம் பயனளிக்கவில்லை. அப்போது மன்னார்குடி மகப்பேறு மருத்துவமனை அருகில் சித்த மருந்து வாங்கி கொடுத்ததும், மூன்று நாட்களில் சளி வாந்தியாகவும், பேதியாகவும் வெளியேறியது. அதிலிருந்து எங்கள் தேடல் நோயைக் குணப்படுத்தும் வைத்தியத்தை நோக்கி இருந்தது.

பல இயற்கை பயிற்சி வகுப்புகள், பல இயற்கை மருத்துவ முகாம்கள், பல ஆன்மீக வகுப்புகளில் பங்கேற்பாளராக கலந்துக் கொண்டோம். அதிலிருந்து பல வைத்தியர்களின் தொடர்பு கிடைத்தது. ஒவ்வொரு சித்த வைத்தியர்களும் தனக்கென்று ஒரு தனித்தன்மையுடன் வைத்தியம் பார்த்தார்கள். உடலுக்கு மட்டுமல்லாமல் மனதையும் சரி செய்து மருந்து கொடுக்கும் ஹோமியோபதி வைத்தியர்களையும் சந்தித்து பயிற்சி எடுத்தோம்.

நாங்கள் சந்தித்த ஒவ்வொரு வைத்தியரின் தனித்தன்மை:

✸ பேதி மருந்து மட்டும் கொடுத்து நோய்களைக் குணப்படுத்தினார்கள்
✸ மூலிகை பொடிகளை மட்டும் வைத்து நோய்களைக் குணப்படுத்தினார்
✸ மூலிகை உப்பு கொடுத்து நோய்களைக் குணப்படுத்தினார்.
✸ உலோகங்களிலிருந்து பஸ்பம், செந்தூரம், கொடுத்து நோய்களை குணப்படுத்தினார்கள்.
✸ விலங்குகளிலிருந்து மான்கொம்பு பஸ்பம், நத்தை பஸ்பம், கூர்மபஸ்பம், நாகபஸ்பம் கொடுத்து நோய்களை குணப்படுத்தினார்கள்.
✸ கோபம், பயம், கவலை, வெறுப்பு, (தன் மேல், குடும்பத்தின் மேல், சமூகத்தின் மேல்), தற்கொலை முயற்சி, பழிவாங்கும் எண்ணம், தாழ்வு மனப்பான்மை இவற்றிற்கெல்லாம் ஹோமியோ மருந்து கொடுத்து குணப்படுத்தினார்கள்.
✸ மருந்தே கொடுக்காமல் நீங்களே மூலிகைச் சாறு குடித்து உணவு மாற்றம் செய்ய சொல்லி குணப்படுத்தினார்.

இப்படிப்பட்ட பல மருத்துவர்களை சந்தித்தோம். அவர்களிடம் எப்படி அனுபவம் பெற்றோம் தெரியுமா?

அரைக்கச் சொன்னதை அரைத்து, பறிக்கச் சொன்னதை பறித்து, இடிக்கச் சொன்னதை

இடித்து, உருட்டச் சொன்னதை உருட்டி, காய்ச்ச சொன்னதை காய்ச்சி நேரடி அனுபவம் பெற்றோம்.

கழிவு நீக்க மருந்துகள் கொடுத்தாலும் எப்படி கழிவு முழுமையாக நீங்கவில்லை என்பதை புரிந்துகொண்டோம். ஏன் என்பதை ஆராய்ச்சி செய்து பார்த்தால் அன்றாடம் குளிக்கும் சோப்பில் உள்ள இரசாயனம் வியர்வை சுரபிகளை அடைத்ததால் வளர்சிதை மாற்றம் நடைபெறவில்லை. ஒவ்வொரு செல்களிலும் இருக்கும் கொல்லும் சக்தி, தள்ளும் சக்தி வறண்டு விட்டது. அதனால் கோடிக்கணக்கான வியர்வை சுரபிகள் கழிவு நீக்கமும் செய்யாமல் சுவாசித்தலும் நடைபெறாமல் இருந்தால் உள் உறுப்புகளின் செயல்பாடு எப்படி இருக்கும்?

அதனால் எந்த இரசாயனமும் சேர்க்காமல் சுத்தமான தேங்காய் எண்ணெயில் சோப்பு செய்து குளித்தால் செல்கள் புதுப்படைகிறது. கழிவு நீக்கம் நடைபெறுகிறது. காந்த சக்தி திணிவு கிடைக்கிறது. உடல் கட்டுடலாக இருக்கிறது. இப்படி கழிவு நீக்கம் செய்து மூலிகை மருந்தின் மூலம் நோய்களைக் குணப்படுத்திய பிறகு நோய் வந்து பலவீனப்பட்ட உறுப்புகளை பலப்படுத்தவும் இரத்த விருத்தி செய்யவும் உயிராற்றல் அதிகப்படுத்தவும் ஒரு புரிதல் ஏற்பட்டது.

தேன், பேரீட்சை, பாதாம், பிஸ்தா, முந்திரி, திராட்சை இன்னும் பல மூலிகை மருந்துகளை ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் கலந்து 15 நாட்கள் உறை வைத்து லேகியம் செய்து கொடுத்தோம். இப்படி பல்வேறு வைத்தியர்களிடம் பெற்ற அனுபவத்தோடு, தேங்காய் எண்ணெய் சோப்பும், லேகியமும் உடல் ஆரோக்கியமாகவும், பலமாகவும், உற்சாகமாகவும் இருக்கும் சக்தியை கொடுத்து மருத்துவத்தில் ஒரு புரிதலை கொடுத்தது.

**- ராணிச்சந்திரன்**

நீட் தேர்வால் பறிபோனது
எங்கள் தோடும் வளையல்
மட்டுமில்லை

எங்கள் சுய கௌரவமும்
எதிர்காலமும் தான்...

வெளியே விளையாட விட
மனமில்லை
பெண் குழந்தை என்பதால்...



**முனைவர். சா.சம்பத்**
மன்னார்குடி

# கருவாச்சி காவியம்

கதையின்னு தான் படிச்சேன்
நான் உன்ன படிச்சு முடிச்சப்ப தான்
வைராக்கியமுன்னா என்னான்னு வாழ்ந்த
உணர்வடி என் தங்கமே!

கட்டினவன் தலைமுறைப் பகையறுக்க உன்
வாழ்வ சீரழிச்ச கதை என்ன தாயீ!

பொட்டச்சிக்கு மானத்த காக்க புருசன்
துணைக்கு இல்லன்னாலும் தாலி
வேணுமுன்னு நிமிந்து நின்னியே தாயீ!

உனக்குன்னு இருந்த தாயையும்
நிறைமாதத்தில குடுத்துப்பவும் கண்ணீரை
அடக்கிவைக்கிற வித்தைய எங்க
கத்துகிட்ட தாயீ!

தாய்ப்பால போல சுத்தமா தான
பிள்ளைகளை வளத்த அது எல்லாமும்
உனக்கு உதவாம போனப்பவும் உன் மனசு
பாசத்த மறக்கலயே தாயீ!

அன்ப கொடுக்கனும், அத திரும்ப
எதிர்பாக்க கூடாதுன்னு வாழ்ந்தியே தாயி நீ
தாண்டி சாமி!

வறண்ட பூமியில பசி பட்டினி கடந்து
வாழயில கூட தானம் பண்ண உன்கிட்ட
இருக்க எல்லாத்தையும் படியளந்தியே தாயீ
அதுக்கு பேருதான்டி நிஜமான தானதர்மம்!

தமிழ் மறத்தி கட்டுனவன் காலம் போன
கடைசியில்ல கூப்பிட்டவும் மாமான்னு
போயி நின்னியே அதுதான் உண்மையான
காதலா தாயீ!

மழை வந்ததே அது நீ சிந்திய
கண்ணீருக்கும் உன் நெஞ்சின்
ஆழத்துல நீ வாழ்ந்த
வாழ்க்கையின் பொருளைப்
போராடி விதிய மதியால
வென்றதுக்கு கடவுள் வடித்த
கண்ணீரடி என் ஆத்தா!

இது கதையில்ல நெசமுன்னு
தெரிஞ்சப்ப என் அடிவயிறு
பிசைஞ்சு போச்சுடி மகராசி


மறுபிறவின்னு ஒன்னு
உண்டுன்னா என் மகளா பிறடி
உன்னை என் கண்ணுமணியா
வச்சு காக்கிறேன்!

சிவகாமி சபதத்துல வந்த
சிவகாமிக்கு அழுதவ இவ
பாண்டிமா தேவி கதைய படிச்சு
அழுதவ ஆத்தா உன் கதைய
படிச்சபிறவு அழுகைய கூட
வைராக்கியமா மாத்த
கத்துகிட்டேன் தாயீ!

இனி வாழ போற வாழ்க்கையை
உன்ன நினைச்சு வாழ்ந்துடுவேன்
நெஞ்சு நிமிர்த்தி.

இப்படிக்கு
**கண்ணம்மா (எ) EGR**
உள்ளிக்கோட்டை

மன்னார்குடி ரா. ராஜேஷ்



எழுதும் தொடர் முதல் அத்தியாயம் (பகுதி 3)

# செண்பக வனம்

செண்பகவனத்தின் பாம்பணி ஆற்றங்கரை சாலையில் வந்தியதேவரும் அவரது பாதுகாப்பு வீரர்களும் குதிரையில் பயணித்துக் கொண்டிருக்கும் போது நடக்க இருந்த விச அம்பு தாக்குதலை மிக சாதுர்யமாய் மாணிக்கமும் அவன் நண்பன் கரியன் எனும் கரும்புலியும் தடுத்தனர். மாணிக்கம், செண்பகவனத்தின் மறவர்கள் தலைவரின் மகன் ஆதலால் எல்லா இடமும் அவனறிந்ததே. அதனால் வந்தியதேவரை மிக பாதுகாப்பாய் வனத்தை தாண்ட வைத்தவனை விரைவில் அழைப்பு வரும் என்கிற குரல் மட்டும் எட்டியது.

கோட்டையை அடைந்த வந்தியதேவன், தன் காதல் மனைவியிடம் நேர்ந்த அனைத்தோடு மாணிக்கத்தையும் கரியனோடு செண்பக வனத்தின் செழிப்பை பற்றியும் திருமேனியின் கடமையுணர்வின் மேன்மை பற்றியும் விவாதித்திருந்தனர்.

இதற்கிடையே தன்னை காண வந்த ஆழ்வார்கடியானை உபசரித்த மாணிக்கத்தை கரும்புகை புகட்டிவர கடத்திய குதிரை வீரர்களை அவர்கள் அறியாமல் பின்தொடர்ந்தான் ஆழ்வார்கடியான்......

இனி.....

பாம்பணி ஆற்றின் தென்கிழக்குப் படுகை அது. உலகின் நீண்டுஉயர்ந்து வளரக்கூடிய புல்லினமான மூங்கில்களின் காடாய் இருந்தது. இடையிடையே செண்பகமரங்கள் செழித்திருந்தாலும் மூங்கில்களே அங்கு பெரிதாய் ஆக்கிரமித்து இருந்தது. மறைவதற்கும் பதுங்குவதற்கும் ஏற்ற இடமாய் இருந்தது. அதன் நடுவே

மேற்கூரை இல்லாத ஒரு பாழடைந்த மண்டபம். அதன் மூலையில் ஒரு தீப்பந்தம் ஒளிர்ந்துக் கொண்டிருந்தாலும் நிலவொளியே அந்த மண்டபத்தை முழுவதுமாய் நிறைத்திருந்தது .

உறக்கமா? மயக்கமா? என தெரியாத நிலையில், ஒருவன் சுவற்றில் சாய்ந்து அமர்ந்திருந்தான். அவனுக்கு அருகில் மாணிக்கத்திற்கு புகட்டப்பட்ட புகைக்குடுவை இரண்டு இருந்தது. இன்னும் நான்கு அடிகள் தள்ள கையும் காலும் கட்டப்பட்ட நிலையில் மாணிக்கம் இருந்தான். நிலவொளியில் சுவற்றின் நிழல், மண்டபத்தின் ஒரு பகுதியை இருட்டடித்திருந்தது. மின்னும் இரட்டை பச்சை ரத்தினம் பதித்தார் போல ஒரு இருண்ட தலை நிலவொளியை கிழித்துக் கொண்டு இருளாய் நீண்டது.

மாணிக்கம் சட்டென கண்விழித்து இருளாய் நீண்ட பச்சைக்கண் கரியனை நோக்கினான். இருவரும் கண்களாலேயே ஏதோ பேசிக்கொண்டனர். இருளில் இருளாய் கரைந்தான் கரியன்.

ஓசையில்லாமல் கையில் கட்டப்பட்ட கயிறை வாயால் அவிழ்த்தான். காலில் காட்டியதை கையால் அவிழ்த்தான். மெல்ல நகர்ந்து மயக்க புகையுள்ள குடுவையை திறந்து சுவரில் சாய்ந்திருந்த வீரனின் மூக்கில் காட்டினான். புகை நன்றாக மூக்கிலேறி வீரன் தளர்ந்து சரிந்தான் . சரிந்தவனை தூக்கி தோளில் சாத்திக் கொண்டு தனது தேக்கங்களியை தேடி எடுத்து இடையில் செருகி கொண்டு வாயிலை நோக்கித் திரும்பினான்.

காவலுக்கு வெளியே நின்றிருந்த மூன்று வீரர்களின் கதையை முடித்துவிட்டு கரியனும் வாயிலுக்கு வந்தான். இருவரின் கண்கள் மீண்டும் ஏதோ பேசின மூவருமாய் வாயிலைக் கடந்து வெளியே வந்தனர்.

அதுவரை உடன்வந்த கரியனைக் காணாது அடர்ந்த காட்டிற்குள் தனித்திருக்கோமே என்று நிலவொளியில் முழித்து முழித்து பார்த்துக் கொண்டிருந்தார் ஆழ்வார்.

தான் வந்துகொண்டிருந்த ஒத்தையடி பாதையில் ஒரு திருப்பமிருப்பதையும்  அதன் முடிவில் ஒரு பாழடைந்த மண்டபத்தையும் பார்த்த ஆழ்வார் மிகுந்த கவனத்துடன் அடிமேல் அடிவைத்து நகர்ந்தார்.

உடைவாள் ஏந்திய வீரனோருவன் தண்ணீர் குடத்துடன் ஒற்றையடி பாதையை ஊடறுத்து உட்புகுந்தான் .இருவரும் நேருக்கு நேராய் ஒரு நொடி இருவரும் மிரண்டனர். தண்ணீர் குடந்தை கீழே வீசிவிட்டு வாளேந்தி கொலைவெறியுடன் ஆழ்வாரை நோக்கி ஓடிவந்தான்.

வெறும்தடியை வைத்து கொண்டு எப்படி சமாளிக்கலாம்
என்று யோசித்து கொண்டே வந்தவனை எதிர்கொள்ள தயக்கமாய் தயாரானார்.
ஆழ்வார் உண்மையில் இப்படி ஒரு தருணத்தை எதிர்பார்க்கவில்லை.

ஆனாலும் வெறும் தடியோடு வாள்வீரானை எதிர்க்க முடிவெடுத்து முன்னேறினார்.
இடைவெளி குறைய குறைய ஆழ்வாரின் இதயத்துடிப்பு அதிகரித்தது.

திடீரென டக் என்ற ஓசை கேட்டது. கொலை வெறியுடன் ஓடிவந்த வாள்வீரனின் மூக்கை பொத்துக் கொண்டு ஒரு ஈட்டியின் முனை நீண்டது. அவனோ நெடுஞ்சான்கட்டையாக ஆழ்வாரின் காலுக்கடியில் விழுந்து கிடந்தான். அவன் பின் மண்டையில் இரண்டே அடியுள்ள ஈட்டி முளைத்திருந்தது.
வாளைத் தடுக்கும் பாவனையில் தன் தடியை ஓங்கிய ஆழ்வார் நடந்ததைப் பார்த்து அதிசயித்து வாய்பிளந்தார்.

இவன் பின்மண்டையில் இருப்பது ஈட்டியா? தடித்த அம்பா? அம்புகள் இத்துணை தடித்திருருக்க வாய்ப்பில்லையே ! என்று வேகமாய் விரிந்த
ஆயுத ஆராய்ச்சியோடு நிமிர்ந்தார். அப்போது தான் வீசிய கையை இறக்கினான் மாணிக்கம்.

ஆழ்வாருக்கு சட்டென நியாபகம் வந்தது இது மாணிக்கத்தின் தேக்குகளியல்லவா! எப்படி ஈட்டியானது என்று மிரட்சியும் ஆச்சரியமும் விலகாத பார்வையோடு மாணிக்கத்தைப் பார்த்தார் ஆழ்வார்.
மிக சாதரணமாக வந்த மாணிக்கம் இறந்தவன் தலையில் காலை வைத்து அழுத்தி ஈட்டியைப் பிடுங்கினான். அதன் கைப்பிடியை திருக அது பழைய நிலையான சாதாரண தேக்கங்கங்களியாய் மாறியது, இடையில் செருகி கொண்டான்.

ஆழ்வார் வேகமாய் மண்டபத்திற்குள்  நுழைந்து ஒற்றனுக்கே உரிய பாணியில் சோதனை செய்து வெளியே வந்தார். அனைவரும் வேகமாய் வெளியேற வேண்டும். அதோ அந்த இரட்டை மூங்கில் புதருக்குள் குதிரைகளை மறைத்து வைத்திருக்கிறார்கள். அதில் இரண்டைக் கொண்டு வாருங்கள் என்று ஆழ்வாரின் பதிலுக்கு காத்திராமல் வேக நடைப் போட்டுக் கொண்டிருந்த மாணிக்கத்தின் முன்னே கரியன் போய்கொண்டிருந்தான். ஆழ்வாரும் அவனை புரிந்தவராய் ஓடி போய் குதிரைகளைக் கொண்டு வந்தார்.
அதுவரை தோளில் சுமந்து வந்தவனை குதிரையில் போட்டான். ஆழ்வாரை நோக்கி குதிரையின் உடலோடு உடலாக ஒட்டிக்கொள்ளுங்கள், என் குதிரையின் பின் தொடருங்கள் என்றவன் தானும் அவ்வாறு செய்தான்.

இருவரையும் கரியன் பின்தொடர்ந்தான்.

காட்டைக் கடந்து பெருசாலைக்கு வந்தவுடன் குதிரை வேகமெடுத்து ஓட தொடங்கியது. ஆழ்வாரும் அதே வேகத்தில் பின்தொடர்ந்தார். இரண்டு நாழிகையில் வீடு வந்து சேர்ந்தார்கள்.
ஏன் இத்தனை தாமதம் ஐயா ? என்றான் மாணிக்கம் .

என்ன தாமதமா ?

நாங்கள் வருவோம் என்று உனக்கு தெரியுமா? நீ மயக்கம் அடையவில்லையா? யார் அவர்கள் ? யார் அவர்கள் ? என்ன நடக்குது இங்கே ? ஐந்தே வினாடிகளில் நான்கு பேரை நீங்கள் இருவரும் மிக சாதாரணமாக கொலை செய்கிறீர்கள் என்று கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனார் ஆழ்வார்.

மாணிக்கம் இரண்டு கைகளையும் மேலே உயர்த்தி ஐயா அமைதி அமைதி என்று ஆசுவாசப்படுத்தினான்.

நான் எங்கு போய் மறைந்தாலும் கரியனிடமிருந்து தப்பவே முடியாது கண்டுபிடித்து விடுவான். அவனது நுகரும் திறனும் அறிவும் அத்தகையது. அந்த மயக்க புகையை ஒரு முறை மட்டும் தான் முகர்ந்தேன் அதுவே ஏதோ தவறாகப்பட்டது.

ஆனாலும் சுயநினைவை இழந்தேன். மூங்கில் காட்டை நெருங்கும் நேரத்தில் முழித்துக்கொண்டேன். ஆனாலும் மயங்கியது போலவே நடித்தேன், எனக்கு இவர்கள் யாரென்று தெரிய வேண்டும். கடந்த மூன்று நாட்களில் இது இரண்டாவது தாக்குதல். ஆச்சரியம் குறையாது கேட்டுக்கொண்டிருந்த ஆழ்வாரிடம் அவரைப் பார்ப்பதற்கு முன்னால் நடந்த அனைத்தையும் சொல்லி முடித்தான் மாணிக்கம்.

எல்லா நிகழ்வையும் கேட்டுக் கொண்ட ஆழ்வார்க்கடியானுக்கு இது ஒரு பெரிய சூதுவளையாக தோன்றியது. அன்று முதல்தாக்குதலுக்கு ஆளான அந்த குதிரையில் வந்த வீரர்களை யார் என்று உனக்கு தெரியுமா மாணிக்கம் என்றார்.
தெரியாது என்பதுபோல் தலை ஆட்டினான்
மாணிக்கம்.

நல்லது என்று கூறிய ஆழ்வாரின் உள்ளம் எதையோ ஆழ்ந்து யோசித்தது. சட்டென மாணிக்கத்திடம் திரும்பியவர், இவனை முதலில் மறைத்து வைத்துவிட்டு நீயும் கரியனும் ஒளிந்துகொள்ளுங்கள்.

நான் இதோ இப்போது வருகிறேன் என்றவர் குதிரையில் ஏறி மின்னலாய் மறைந்தார்..

## பயணம் தொடரும் ...

# உதிரிகள்



ரா. ராஜராஜன்
மன்னார்குடி

பக்கத்துவீட்டு காமராசு அண்ணனுக்கு மூணு புள்ளைங்க. அண்ணன் கூலி வேலைக்குப் போகுது. ஊட்டுக்கார அக்கா சிவகாமியும் ரெயில்வே கேட் வாசல்ல பழம் விக்கிது. நல்லா வாழ்ந்த குடும்பம். ஆத்துல தண்ணி வராததால விவசாயம் செத்துப் போச்சு. போர் போடுறத்துக்கும் காசு இல்லாம கூலி வேலைக்கு போக ஆரம்பிச்சாரு... மூத்தவளுக்கு நல்ல ட்ரைவர் மாப்பிள்ளை வரவும், இருக்குற நிலத்த அடகு வச்சு மேற்கொண்டுக் கடனை வாங்கி கல்யாணம் பண்ணி வச்சிட்டாங்க. ரெண்டாவது மவ பனிரெண்டாம் வகுப்பும் மூணாவது பய ஒன்பதாம் வகுப்பும் படிக்குதுவ.

அண்ணனை காலைல ஆறு மணிக்கெல்லாம் லாரில வந்து வேலைக்கு கூப்பிட்டு போய்டுவாங்க. திரும்புறதுக்கு இரவு எட்டு ஆகிடும். கட்டட வேலை, ரோடு போடுறதுனு ஏதாவது ஒரு வேலை இருக்கும். சாப்பாடு போட்டு சம்பளமும் கொடுத்துடுவார் காண்ட்ராட் காரர். சிவகாமி அக்கா காலைல அஞ்சு மணிக்கெல்லாம் எழுந்து தோட்டத்துக்கு போனாதான் ஓரளவு கொறஞ்ச காசுக்கு பழம் வாங்க முடியும். நேரா ரெயில்வே கேட்டுக்கு கூடையை தூக்கிட்டு போனா போற வர வண்டி, காரு, பஸ்ஸுனு எது வந்தாலும் கூடையை தூக்கிட்டு ஓடும். சிலரு வாங்குவாங்க, சிலரு வேண்டாம்னு சொல்லுவாங்க, சிலரு திரும்பி கூட பாக்க மாட்டாங்க. வண்டி ஏதும் வரலேனா மரத்தடில வந்து உட்கார்ந்து காத்துட்டு இருக்கும். வண்டி வந்தா எழுந்து ஓடணும் . அக்காவும் கூலி வேலைக்கு தான் போயிட்டு இருந்துது. பொம்பள ஆளுக்கு கொடுக்குற சம்பளத்தை விட நூறு இருநூறு இந்த பழம் விக்குறதுல கூட கிடைக்கும்னு இந்த வேலைக்கு வந்துட்டு. பழம் சில நாள் மதியத்துக்குள்ள வித்திடும், சில நாள் சாயந்தரம் ஆகிடும். சமயத்துல விக்காம மீந்துட்டுனா ஜூஸ் கடைல வித்துட்டு வீட்டுக்கு வந்துடும். அன்னைக்கு லாபம் குறைச்சலா தான் இருக்கும்.

இப்படி ரெண்டுபேரும் வெயிலையும் மழையையும் ராப்பகலா நின்னு வேலைப்பார்த்தாலும் விக்கிற வெலவாசில ஒண்ணுத்துக்கும் ஆகாது. இதுல மூத்தவ கல்யாணத்துக்கு வாங்குன கடனை வேற கொஞ்ச கொஞ்சமா அடைக்கணும். சில நாலு காமராசு அண்ணனுக்கு வேலை இருக்காது. அன்னைக்கு அண்ணனும் கூடைல பழம் வாங்கிட்டு NH முக்கத்துக்கு விக்க போய்டும். வெட்ட வெயில்ல ரெண்டுபேரும் கால்ல செருப்பு இல்லாம வித்துட்டு இருப்பாங்க. வேற என்ன செய்றது, வண்டிவந்தா ஓடணும் இல்லேன்னா திரும்பி மரத்தடிக்கு ஓடியாரனும். இப்படி ஓடிட்டு இருக்குறதுக்கு வாரத்துக்கு ஒரு செருப்பு வாங்கணும். அவங்க எங்க போவாங்க . அந்த காசு இருந்தா புள்ளைங்களுக்கு நல்ல சாப்பாடு கொடுக்கலாம்னு சொல்லுவாங்க. நமக்கு தான் காலுல சின்ன கீறல் பட்டாலும் வலிக்கும் டாக்டர்ட்ட போகணும் , அவர் செப்டிக் ஆகிடும்னு ஊசி போட்டு , மருந்து கொடுத்து , கட்டு போட்டுட்டு ஒருவாரம் ஜாக்கிரதையா இருக்க சொல்வார் . ஆனா அவங்களுக்கு அந்த வலியும் தெரியாது , கால் பொத்தலும் புரியாது . புள்ளைங்க நல்லா இருக்கணும் அவ்வளவு தான்.

இதப்பத்தி கேட்டா அக்கா சொல்லும் ‘‘நடு மவ டாக்டர் ஆகி எங்க கால் பொத்தலை சரி பண்ணிடுவானு. அக்காவுக்கும் இதெல்லாம் தெரியாது. நடு மவள பத்தாவதோட படிப்பை நிறுத்திப்புட்டு கணேசன் அண்ணனோட பேன்சி ஸ்டோர்ல கொஞ்ச நாள் வேலைக்கு அனுப்பிவிட்டு, போஸ்ட் மாஸ்டர் ஐயாட்ட கொஞ்சம் கடன் வாங்கி யாராவது நல்ல

மாப்பிள்ளையா பார்த்து கல்யாணம் பண்ணிவச்சிடலாம்னு தான் இருந்துது. மூத்தவளுக்கு கல்யாணம் முடிஞ்சப்பவே காமராசு அண்ணன் நடு மவளுக்கு கல்யாணம் பண்றப்ப பணம் கடனா வேணும்னு போஸ்ட் மாஸ்டர் ஐயாட்ட சொல்லி வச்சிட்டார்.

நடு மவ பத்தாம் வகுப்புல நல்ல மார்க் எடுத்திருந்தது. அதுக்கு மேற்கொண்டு படிக்கணும்னு ஆசை. ஆனால் காமராசு அண்ணன் பொம்பள புள்ளைய படிக்க வச்சி என்ன பண்றது, அதுக்கேத்த மாப்பிள்ளையால பாக்கணும்னு வேண்டாம்னு சொல்லிட்டார். இந்த சேதி ஸ்கூல் ஹெட் மாஸ்டருக்கு தெரிஞ்சு ஒருநாள் ராத்திரி நேரா காமராசு அண்ணன் வீட்டுக்கு வந்துட்டார். சின்னப்பைய எங்க வீட்டுக்கு ஓடியாந்து தான் பிளாஸ்டிக் சேர் எடுத்துட்டு போனான். வந்தவரு '' யப்பா காமராசு உன் மவ எவ்ளோ மார்க் எடுத்தானு தெரியுமான்னு '' கேக்க, '' ஏதோ நல்ல மார்க்கு , ஸ்கூலேயே அதிக மார்க்குனு சொல்லிச்சி சார் '' . உடனே ஹெட் மாஸ்டர் ''அதான் தெரியுதுல அப்பறம் என்ன எதனால ஸ்கூலுக்கு அனுப்ப மாட்டுறனு'' கேட்டார் . '' சார் எங்க நிலைமை உங்களுக்கே தெரியும், விவசாயம் பண்ணி அப்பா காலத்துல எவ்வளவு பேரா வாழ்ந்தோம் ,தண்ணி வராததால இப்ப எப்புடி கஷ்ட படுறோம்னு. நீங்க காசு வாங்காம சோறுபோட்டு பாடமும் சொல்லி கொடுக்குறதால தான் இவளை ஸ்கூலுக்கே அனுப்பினேன். இல்லேன்னா அனுப்பிருக்கவே மாட்டேன்'' என்றார் காமராசு அண்ணன்.

நான் எங்க கொடுத்தேன். கவர்மெண்ட் கொடுக்குது. அத விடு , உன் மவ ஆறாவது படிக்கிறப்ப, எல்லா பசங்கள்ட்டயும் படிச்சிட்டு என்னவாக போறீங்கன்னு கேட்டேன். அதுக்கு உன் மவ நான் டாக்டர் ஆக போறேன்னு சொன்னா. எனக்கு தான் உன் நிலைமை தெரியுமே, அதனால எதுக்கு டாக்டருக்கு படிக்கணும்னு சொல்றேன்னு கேட்டேன். அதுக்கு அவ '' டாக்டர் ஆகி எங்க அப்பா அம்மாவோட கால் பொத்தலை சரி பண்ணனும் , அப்பறம் அவங்கள காலாட்டிடு சாப்பிட வைக்கணும், தம்பிய நல்லா படிக்க வைக்கணும் , அடகு வச்ச நெலத்த மீட்டு அப்பா கைல கொடுத்து நிம்மதியா விவசாயம் பாக்க சொல்லணும்னு '' சொல்லிச்சி. அதுக்கு நான் '' இதே வைராக்கியத்தோடு படிச்சி நல்ல மார்க் எடு புள்ள , வீட்டு கஷ்டத்த நெனச்சுக்கிட்டு கோட்டை விட்டுறாதனு'' சொன்னேன் என்றதும் காமராசு அண்ணன் அப்படியே சரிஞ்சு கீழ உட்காந்துட்டார்.

உன் புள்ள சொன்ன மாதிரியே நல்ல மார்க் எடுத்து ஸ்கூல் பர்ஸ்ட் வந்துட்டு. இன்னும் ரெண்டு வருஷம் தான் பல்ல கடிச்சிட்டு படிக்க வச்சிடு , அது எடுக்குற மார்க்குக்கு கண்டிப்பா மெடிக்கல் சீட் கிடைச்சுடும். அப்பறம் உன் கஷ்டமெல்லாம் போய்டும் , ரெண்டு புள்ளைக வாழ்க்கையும் நல்லா இருக்கும்பா என்றார் ஹெட் மாஸ்டர். '' தெய்வமயா நீங்க நல்ல நேரத்துல வந்து புத்தி சொன்னீங்க, இல்லேன்னா என் புள்ள வாழ்க்கையை நானே கெடுத்திருப்பேனே. இந்த கிறுக்கு சிறுக்கியும் ஏதும் சொல்லிருக்க மாட்டா. சார் நாங்க உழைக்குறதே எங்க புள்ளைவோ எங்களை மாதிரி கஷ்ட படாம நல்ல படியா வாழணும்னு தானே , கண்டிப்பா ஸ்கூலுக்கு அனுப்புறேன் சார். நீங்க பாத்துக்கிடுங்க'' என்றார் .

யம்மா சிவகாமி இன்னொன்னு சொல்றேன் கேட்டுக்க '' ரெண்டு பெரும் வேலை வேலைனு புள்ளைய கவனிக்காம விட்டுடாதீங்க, சத்தான சாப்பாடா ஆக்கி போடுங்க. வளர்ற புள்ளைங்க. ரெண்டு மாசத்துக்கு முன்னாடி 2 வாட்டி இவ ஸ்கூலுள்ள மயக்கம் அடிச்சு விழுந்துட்டா, சரினு அறிவியல் டீச்செர்ட்ட சொல்லி ஆஸ்பத்திரிக்கு அழைச்சிட்டு போக சொன்னேன். டாக்டர் பார்த்துட்டு உடம்புல சத்தே இல்லை, அதனால மாசா மாசம் அவளுக்கு சரியா மாசவிளக்கு போகலானு சொல்லி, சத்தான சாப்பாடு கொடுக்க சொன்னார். நான் தான் உங்கள்ட பரிட்சை முடிஞ்சு சொல்லிக்கலாம்னு சொல்லிட்டு , நம்ம பால்வாடில குழந்தைகளுக்கு கொடுக்குற

சத்துருண்டைய இவளுக்கு தினம் காலைல கொடுக்க சொன்னேன். அப்பறம் டீச்சர்களும் அப்பப்ப இவளுக்கு ஏதாவது செஞ்சி கொடுத்துட்டு இருக்காங்க. நீயும் கொஞ்சம் கவனிச்சுக்கமா.

இரவு சாப்பாடோட சேர்த்து காலைக்கும் கொஞ்சம் செஞ்சி அதுகளுக்கு கொடு. மதியம் சத்துணவு சாப்பிட்டுக்குங்க. நானும் பார்த்துக்கிறேன்'' என்றார். அப்பொழுது தான் சிவகாமி அக்காவிற்கு புரிந்தது. '' காலைல 5 மணிக்கே எழுந்து ஓடுவதால புள்ளைங்களுக்கு ஒழுங்கா கால சாப்பாடு கொடுக்க முடியலை, சரிங்க சார் நான் பார்த்துகிறேன் என்று அக்கா சொன்னதும் ஹெட் மாஸ்டர் புறப்படுவதாக சொல்லி நகர்ந்தார்.

ஒரு வருடம் ஓடியது. நானும் சென்னைக்கு வேலைக்கு போய்ட்டேன். அப்ப தான் மருத்துவ சீட்டுக்கு நீட் பரீட்சை எழுதணும்னு சொல்லி ஊரெல்லாம் ஒரே பிரச்சனையாவும் போராட்டமாவும் இருந்தது. இதை பற்றி எதுவுமே தெரியாத காமராசு அண்ணனோட நடு மவ படிச்சிட்டு இருந்தா. அப்போ தான் திடீர்னு அனிதாங்கிற பொண்ணு நீட் பரிட்சையால மருத்துவர் ஆக முடியலன்னு சொல்லி செத்துப் போச்சு.

எனக்கு காமராசண்ணன் மவ ஞாபகம் தான் வந்தது. அந்த வார விடுமுறையில் ஊருக்கு போய் ஒரு நாள் இரவு இதை பத்தி காமராசு அண்ணன்ட்ட சொன்னேன். ''தெரியலையேடா நான் நாளைக்கு போய் ஹெட் மாஸ்ட்டரை பார்த்துட்டு வரேன். இவ தான் ஏதும் சொல்ல மாட்டாளேன்னு'' அண்ணன் சொன்னார். அடுத்த நாள் அண்ணன பழம் வித்துக்கிட்டு ரோட்டுல நின்னுட்டு இருந்தத பார்த்துட்டு ''என்ன இன்னைக்கு வேலைக்கு போகலையானு'' கேட்டேன்.

இல்லடா காலையிலேயே போய் சாரை பார்த்தேன் ஏதோ இன்னொரு பரிச்சை எழுதணுமாம், அது எழுதுனா தான் டாக்டர் சீட் கிடைக்குமாம், நம் மவ அதெல்லாம் படிச்சிடுவானு'' சொன்னாருடா. என்ன, அதுக்கு ஏதோ டவுனுக்கு போய் பத்து பதினஞ்சு நாள் தங்கி படிக்கணுமாம். கவெர்மெண்டே அதை இலவசமா நடத்தும், கவலைப்படமா நீ போ , புள்ள பன்னிரெண்டாம் வகுப்பு படிக்க ஆரம்பிக்கட்டும்னு, மத்த விவரம் நான் பேசிட்டு சொல்றதா '' சொன்னார். என்னமோ சார் நீங்க பார்த்துக்குங்கனு சொல்லிட்டு நான் வந்துட்டேன் என்றார். எப்படியும் லாரியை விட்டுடுவேன் , வேலைக்கு போவ முடியாது. அதான் காலையிலேயே சிவகாமிட்ட சொல்லி எனக்கும் சேர்த்து பழம் வாங்க சொல்லிட்டேன்'' என்றார்.

இடையிலே ஒரு முறை ஊருக்கு வந்தப்ப மூத்தவள் புள்ளைங்களுக்கு காதுகுத்து வச்சிருக்கேன்டா அவசியம் வந்துடுன்னு அண்ணன் சொல்லிச்சு. நடு மவ நல்லா படிச்சிட்டு இருக்கானும், பரிட்சை முடிஞ்சு டவுனுக்கு கோச்சிங் கிளாசுக்கு அழைச்சிட்டு போகணும்னு ஹெட் மாஸ்டர் சொன்னதாகவும் சொன்னார். வேலை காரணமாக காதுகுத்துக்கு நான் போகல. வீட்டிலிருந்து அம்மாவும் அண்ணியும் போனதா சொன்னாங்க. ஒருவழியா பரிட்சையும் முடிஞ்சிட்டு.

அடுத்து கோச்சிங் கிளாஸ் டவுன் ஸ்கூலுக்கு போகணும்னு ஹெட் மாஸ்டர் சொன்னதா நடு மவ சொன்னதும், அண்ணன் காலைல முதல் வேலையா தலைமை ஆசிரியர் வீட்டுக்கு போய் முழுவிவரமும் கேட்டுக்கிட்டார். ஊர்லேந்து இன்னும் சில பசங்கள் போறாங்க. பஸ்சுல எல்லாம் சேர்த்து போயிட்டு வந்துடுவாங்க, நீ ஒன்னும் பயப்படாதான்னு ஹெட் மாஸ்டர்

சொல்லிருக்கார்.

ராத்திரி வீட்டுக்கு வந்ததும் காமராசு அண்ணன் சிவகாமி அக்காட்ட '' இது மாதிரி சார் சொல்றாரு புள்ள, எப்படி இவளை டவுன் வரை அனுப்புறது. அதுவும் இல்லாமல் பஸ்சுக்கு வேற போற வரதுக்கு காசு கொடுக்கணும், பேர பசங்க காதுகுத்துக்கு வாங்குன கடன் வேற சேந்துட்டு, இப்ப இது வேற செலவு'' என்ன பண்றது என கேட்டதும். என்னங்க பண்றது அனுப்பி தானே ஆகணும். காச பார்த்தா படிப்பு கிடைக்குமா. மகமாயி தயவால புள்ள நல்ல படியா படிக்குது, இன்னும் கொஞ்ச நாள் தானேனு'' அக்கா சொல்லிச்சு. அண்ணனும் யோசனைலேயே தூங்கி போனார். காலைல'' எடி நானே புள்ளைய சைக்கிலுள்ள வச்சி டவுன்ல கொண்டு போய் விட்டுட்டு அழைச்சிட்டு வந்துடுறேன்.

பகல்ல அங்கேயே பழம் வித்துட்டு வந்துடுறேன். சரி என்பதுபோல் தலையாட்டிய அக்கா எங்கம்மாட்ட வந்து '' டவுன் ஸ்கூல் இங்கேந்து 10 மைலுக்கு மேல இருக்கும், தினம் சைக்கிலுள்ள போயிட்டு வந்தா என்னவாகும். அதுவும் இல்லாம வேலைக்கு போனா தெனம் இருநூறு கூட கிடைக்கும் , அத விட்டுட்டு புள்ளைய டவுன் ஸ்கூல்ல விட்டுட்டு அங்கேயே பழம் விக்குறேனு சொல்றாரே, சொன்னா கேக்கவா போறார். இதையே தான் ராத்திரி பூரா நெனச்சிட்டு தூங்காத இருந்திருப்பார்னு '' பொலம்பிட்டு போச்சு.

காமராசு அண்ணன் சொன்ன மாதிரியே தெனம் சைக்கிளிலேயே அழைச்சிட்டு போயிட்டு வந்துட்டார். கோச்சிங் கிளாஸ் எல்லாம் முடிஞ்சதும் ஹெட் மாஸ்டரை பார்க்க அண்ணன் போயிருந்தார் காமராசு இன்னும் பத்து நாளுல பரிட்சை இருக்கு. ஒன்னு ரெண்டு நாளுல பரீட்சைக்கான கடுதாசி வந்திடும். கொஞ்சம் கஷ்டமா இருந்தாலும் புள்ள படிச்சிடுவா என்று ஹெட் மாஸ்டர், அண்ணனிடம் கூறியுள்ளார்.

பரிச்சை எழுத கடுதாசி வந்துச்சுனா சொல்லி அனுப்புங்கய்யா நான் வந்து வாங்கிக்குறேனு போஸ்ட் மாஸ்டரிடம் விவரம் சொல்லி வந்தார் காமராசு அண்ணன். கடுதாசியும் வந்தது. அதனை பிரித்து விவரம் பார்த்த போஸ்ட் மாஸ்டர் அதிர்ச்சியானார். தேர்வு மையம் இந்தூர், மத்திய பிரதேஷ் என்றிருந்தது. ஒன்றும் புரியாமல் ரோட்டில் போன முருகனை கூப்பிட்டு காமராசை வந்து என்னை பார்க்க சொல்லுன்னு சொல்லிட்டு நேராக ஹெட் மாஸ்டரை பார்க்க போனார்.

அதை வாங்கி படித்த ஹெட் மாஸ்டர் '' ஏதும் தவறு நடந்திருக்கும் நான் பேசிட்டு சொல்றேனு '' சொல்லி போஸ்ட் மாஸ்டரை அனுப்பி வைத்தார். பன்னிரெண்டாம் வகுப்பு ஆசிரியரை தொலைபேசியில் அழைத்து ஏனைய மாணவர்களின் விவரம் கேட்டார். சிறிது நேரத்தில் ஆசிரியர் அழைத்து அனைவருக்கும் வேறு வேறு இடமாக இருந்தாலும் தமிழ்நாட்டில் தான் தேர்வு மையம் உள்ளதாக செய்தியை சொன்னார். இந்த விவரத்தை மாவட்ட தலைமை அதிகாரிக்கு போன் செய்து சொன்னார் ஹெட் மாஸ்டர்.

அதற்கு தலைமை அதிகாரி'' ஒரு புள்ளைக்கு மட்டும் இல்லையா, மாநிலம் முழுதும் நிறைய பேருக்கு வெளி மாநிலங்கள் போட்டுள்ளார்கள். நானும் சென்னைக்கு அழைத்து பேசியுள்ளேன். தகவல் வந்ததும் உனக்கு தெரியப்படுத்துகிறேனு கூறி இணைப்பை துண்டித்தார். தனக்கு தெரிந்த சில சென்னை அதிகாரிகளை தொடர்பு கொண்டு விவரம் கேட்க அவர்களோ வேறு வழியில்லை. அங்கு போய் தான் எழுதனும், எனினும் இவ்விசயம் அமைச்சருட்ட போயிருக்கு . பொறுத்திருப்போம் நல்ல சேதி வரும் என்றனர். காமராசுவிடம் எப்படி இதனை சொல்வது என்ற

குழப்பத்திலேயே அலைபேசியை துண்டித்தார் ஹெட் மாஸ்டர்.

இரவு வேலைவிட்டு வீட்டிற்கு திரும்பி கொண்டிருந்த காமராசு அண்ணன் தெருமுனைக்கு வரும் போதே வீட்டில் நாற்காலி போட்டு யாரோ உட்கார்ந்திருப்பதை அறிந்து வேகமாக வந்தார். அருகில் வந்ததும் ஹெட் மாஸ்டர் என அறிந்ததும் ஓடாத குறையாக வந்து வீட்டு வாசலில் நின்றார். சொல்லி அனுப்பியிருந்தா நானே வந்திருப்பேனே சார், உங்களுக்கு ஏன் சிரமம் என கேட்டுக்கொண்டே சின்ன மவனை விட்டு காபி வாங்கி வர சொன்னார். அதற்கு சிவகாமி அக்கா '' நான் கேட்டேங்க, சார் இப்ப தான் குடிச்சேன் வேணாம்னு சொல்லி தண்ணி வாங்கி குடிச்சார்'' என்றார்.

''காமராசு நம்ம புள்ளைக்கு வெளி மாநிலத்துக்கு போய் பரிட்சை எழுதுறா மாதிரி இருந்தாலும் இருக்கும். முடிஞ்ச முட்டும் இங்கவே எங்காவது எழுத வைக்கிறதா சென்னைலேந்து சொல்லிருக்காங்க. நானும் பேசிட்டு தான் இருக்கேன். உனக்கு விவரம் சொல்லிட்டு போலாம்னு தான் வந்தேன்னு'' என்றார் ஹெட் மாஸ்டர். அதுக்கு அண்ணன் '' சார் வெளி மாநிலமுனா எங்கேயா, சென்னை பக்கமா இல்லை தூரமா டெல்லி பக்கமா'' என்றார். '' இல்லை அது பாம்பேக்கு அந்தாண்ட இந்தூர் '' என்றார் ஹெட் மாஸ்டர். சார் அவ்வளவு தூரம் எப்படியா புள்ளைய அனுப்புறது, ஊரு பேரு மொழி ஏதும் தெரியாதே. இதுக்கு செலவு வேற ஆகுமே என சன்னமான குரலில் அண்ணன் முனவினார்.'' இன்னும் 6 நாள் தான் பரிட்சைக்கு இருக்கு, ஏதாவது நல்லது நடக்கும், சாமிய வேண்டிக்கோங்கன்னு சொல்லிட்டு ஹெட் மாஸ்டர் கிளம்பினார்.

அண்ணனும் அக்காவும் தூக்கம் பிடிக்காம உட்கார்ந்திருந்தாங்க. என்ன செய்வதென்றே புரியாமல் தவித்தார்கள். ஒருவேளை அந்த ஊருக்கு போய் தான் பரிட்சை எழுதணும்னா என்ன பண்றது. காசுக்கு எங்க போறது. அங்க போய் எப்படி தேடிக் கண்டுபிடிக்கிறது என ஒன்னுமே புரியாமல் இருவரும் தவித்தார்கள். திடீரெனெ மவளிடமிருந்து நடு ராத்திரியில் விசும்பல் சத்தம் கேட்டு தூங்கி கொண்டிருந்த மவளை நோக்கி நகர்ந்தாள் சிவகாமி அக்கா. அம்மாவின் கைப்பட்டதும் அவளை பிடித்து ஓவென கதறியழ ஆரம்பித்தாள். மகள் அழுவதை தாங்க முடியாத காமராசு அண்ணன் '' ஏடி புள்ளைய பாரு என உடைந்த குரலில் கூறிவிட்டு கொள்ளைப் பக்கம் போயி அந்த நடு ராத்திரியில் தொட்டியில் இருந்த நீரை எடுத்து தலையில் ஊற்றி கண்ணீரை தண்ணீரால் கழுவினார்.

நேராக வீட்டுக்குள் வந்து விளக்க கொளுத்தி சாமிய கும்பிட்டு திருநூறை எடுத்து தானும் பூசிக்கிட்டு மவளுக்கும் பூசிவிட்டு ''கவலைப்படாத ஆத்தா பரிட்சை எங்க இருந்தாலும் உங்கப்பன் உன்னை அழைச்சிட்டுப் போறேன்னு'' சொல்லிட்டு விறு விறுவென வெளியில் சென்றார். போனவரை கூப்பிட வேண்டாமென சிவகாமி அக்காளும் ஏதும் சொல்லாமல் இருந்துட்டா.

என்ன செய்வதென்று தெரியாத காமராசு அண்ணன் ஆத்தங்கரை கட்டையில் போய் அமர்ந்தார். பொழுது விடிந்து ஆட்கள் நடமாட்டம் ஆரம்பித்தது. யாரையும் ஏறிட்டு பாக்க இயலாமல் புள்ள அழுததை நெனச்சுகிட்டே உட்கார்ந்திருந்தது காமராசு அண்ணன். சூரியஒளி வலது காதுல சுள்ளுனு அடிச்சதும் அங்கிருந்து எழுந்து நேரா ஹெட் மாஸ்டர் வீட்டுக்கு போனார். திண்ணையில் அமர்ந்திருந்த ஹெட் மாஸ்டர், அண்ணனை எதிர்பார்த்துட்டு உட்கார்ந்திருந்த மாதிரி உடனே '' காமராசு ஹைகோர்ட்டுல கேஸ் இன்னைக்கு வருதுயா, நல்ல தீர்ப்பா வரும், நீ வேலைக்கு போ நான் சொல்லி அனுப்புறேன்'' என்றார். நல்லது சார்னு சந்தோசமா எழுந்து

நேரா ரயில்வே கேட்டுக்கு போனார் அண்ணன்.

சிவகாமி அக்காவோட கூடைய வாங்கிக்கிட்டு‘‘ ஏ புள்ள நீ வீட்டுக்கு போய் மவள பாத்துக்க, நான் வித்துட்டு வந்துடுறேனு‘‘ சொல்லிட்டு, வண்டி வந்ததும் கூடையை தூக்கிட்டு பழம் விக்க ஓடினார். உச்சில, குமரன் மவன் வந்து ‘‘தமிழ் நாட்டிலேயே பரீட்சை வைக்கணும்னு கோர்ட்டுல தீர்ப்பு வந்துடுன்னு ஹெட் மாஸ்டர் செய்தி சொன்னதா சொல்லிட்டு‘‘ ஓட போனான். அவனை மடக்கி அவன்கிட்ட 4 பழத்தை கொடுத்து நிறைவா அனுப்பினார் காமராசு அண்ணன்.

இருப்பு கொள்ளாமல், இருந்த பழத்தை ஜூஸ் கடையில் வித்துப்புட்டு நேரா வீட்டுக்கு போனார். ‘‘ இந்தாத்தா தமிழ் நாட்டிலேயே பரீட்சை வைக்கணும்னு ஜட்ஜு ஐயா தீர்ப்பு சொல்லிட்டார். கவலைப்படாம நல்லா படினு சொல்லிட்டு, சிவகாமி அக்காவை பார்த்து ‘‘ஏடி புள்ளைக்கு என்ன சமைச்சு போட்ட, சின்னவன் சாப்டானா‘‘ என்று கேட்டுகிட்டே கொல்லைப்பக்கம் போய் கை கால் கழுவிட்டு வீட்டுக்குள்ள வந்து சாமி கும்பிட்டு துன்னூறு பூசிக்கிட்டார்.

அன்னைக்கு எல்லோரும்  நிம்மதியா தூங்கிட்டாங்க. காலைல வெள்ளனவே எழுந்து ரெண்டு பேரும் வேலைக்கு போய்ட்டாங்க. புள்ளைங்களுக்கு புடிக்குமேனு பலாசுளைய வாங்கிட்டு ராத்திரி வீட்டுக்கு வந்துது அண்ணன். மவ உம்முனு உக்கார்ந்திருந்தத பார்த்துட்டு இந்த புள்ள பலாச்சுளை வாங்கியார்ந்திருக்கேன் எடுத்துக்கிட்டு சின்னவனுக்கு கொடுனு சொல்லிட்டு அங்க வச்சிது, புள்ளைட்ட எந்த அசைவும் இல்லனதும் ‘‘ என்னாச்சு எதுக்கு இப்படி மூஞ்சிய தூக்கிட்டு உட்கார்ந்திருக்கனு‘‘ சத்தம் போட்டுது. ‘‘தீர்ப்பை எதிர்த்து டெல்லில கேஸ் போட்டுருக்காங்களாம், என்னாவும்னு தெரியலைனு‘‘ சிவகாமி அக்கா சொன்னதும், அண்ணன் இடிஞ்சி போய்ட்டார். புள்ளைட்ட காமிச்சிக்காம அதுபக்கத்துல்ல உட்காந்து ‘‘ எம்மா எங்க இருந்தாலும் நான் உன்ன அழைச்சிட்டு போரன்மா, அப்பா இருக்கேன். நீ கவலைப்படாம நல்லா படினு‘‘ சொன்னார்.‘‘ இல்லப்பா நான் படிக்கவே இல்லப்பா, என்ன வேலைக்கு சேத்துடுங்க நான் போறேன், எனக்கு பயமா இருக்கு அங்கெல்லாம் போவணு‘‘ சொல்லி அழுதுட்டு. நீ எதுக்கும் கவலை படாத தாயி ஏதும் ஆகாது நல்ல தீர்ப்பு வரும், மகமாயி காப்பாத்துவானு சொல்லி துன்னூறு எடுத்து பூசிவிட்டார்.

மவளை மடில படுக்க வச்சு தட்டி கொடுத்து தூங்க வச்சிட்டு அவரும் அப்படியே சாஞ்சி படுத்தார். தூக்கம் பிடிபடல, காலைல எழுந்து நேரா போஸ்ட் மாஸ்டரை பார்த்து ஐயா மவளுக்கு எங்க பரிச்சைனு தெரிலையா கொஞ்சம் பணம் வேணும்னு சொல்லறத்துக்குள்ளயே, நீ சொல்லவே வேணாம்  நான் எடுத்து வச்சிருக்கேன். தீர்ப்பு வரட்டும் பார்த்துட்டு தரேன். ட்ரைனெல்லாம் விசாரிச்சு வச்சிட்டேன், நீ போயிட்டு வா, புள்ளைய கலங்காம படிக்க சொல்லுன்னு சொன்னதும், காமராசண்ணன் கண்ண தொடச்சிட்டு ரொம்ப நன்றியா, நான் கிளம்புறேன், வேலைக்கு போகல, மனசு ஒரு மாதிரி இருக்கு புள்ளைங்களுக்கு ஏதாவது திங்க வாங்கிட்டு வீட்டுக்கு போறேன்னு சொல்லிட்டு கிளம்பிட்டு.

அடுத்தநாள் தீர்ப்பு எதிரா வந்துட்டுனு ஹெட் மாஸ்டர் வீட்டுக்கு வந்து சேதி சொல்லிட்டு இருக்குறப்பவே போஸ்ட் மாஸ்டரும் வீட்டுக்கு வந்துட்டார். எப்பா ரெயில் டிக்கெட் ரெண்டு பேருக்கும் எடுத்துட்டேன், நாளைக்கு விடிய காலைல மைசூர்ல டிரெயின், உன் மாப்புளைய கார் எடுத்துட்டு வர சொல்லிருக்கேன், அதுல மதியமே கிளம்பி மைசூர் போயிடுங்க. சீக்கிரம் போனாலும் பரவாயில்லை ஸ்டேஷன்லேயே இருந்துட்டு விடிய காலை ட்ரைன புடிசீங்கனா நாளன்னைக்கு காலைல இந்தூருக்கு போயிடலாம்.

அங்க போஸ்ட் ஆபீஸ்ல என் சிநேகிதன் இருக்கான், அவனை வந்து கூட்டிட்டுப் போக சொல்லிருக்கேன், அவன் எல்லாத்தயும் பார்த்துப்பான். அதுபோல திரும்பி வரதுக்கு சென்னைக்கு டிக்கெட் போட்டுருக்கேன் அவனே ஏத்திட்டுடுவான், அங்கேந்து பஸ்ஸ புடிச்சு நீ வந்துடு சரியா. இந்தா டிக்கெட், என் சிநேகிதன் நம்பர், விலாசம் எல்லாம் இருக்குனு சொன்னதும், காமராசண்ணனுக்கு என்ன சொல்றதுன்னே தெரியாமல் அவர் காலுல விழுவ போனார். அட நீ வேறப்பா, நம்ம புள்ள ஒருத்தி நல்லா படிக்கிறா, அவளுக்கு இது கூட செய்யலேன்னா எப்படி. அதுக்கு தானே நாமெல்லாம் இருக்கோம்னு போஸ்ட் மாஸ்டர் சொல்லிட்டு அண்ணனைத் தட்டிக் கொடுத்தார்.

எல்லாத்தயும் பத்திரமா எடுத்துக்கோங்க , போட்டோ , ஐடி, அட்ரஸ் புரூப், பரிட்சை கடுதாசி என எல்லாத்தையும் மறக்காம எடுத்துக்கோங்க. நம்ம வீட்ல ரெண்டு நாளுக்கு சாப்பிடுறா மாதிரி புளியோதரை , சப்பாத்தி போட சொல்லிருக்கேன். போறப்ப அப்படியே வாங்கிட்டு போய்டுங்கனு ஹெட் மாஸ்டர் சொன்னதும் , அம்மாக்கு ஏன்யா இந்த சிரமம்னு அண்ணன் சொல்லுச்சு, இல்லப்பா எனக்கு தீர்ப்பு எப்படி வந்தாலும் நாம தயாரா இருக்கணும்னு எங்க வீட்டம்மாட்ட ஏற்கனவே சொல்லிட்டேன்.

அதேபோல தான் போஸ்ட் மாஸ்டரும் எல்லாத்தையும் நான் விசாரிச்சு வச்சிடுறேனு முன்னமே என்கிட்ட சொல்லிட்டார். உன்கிட்ட சொல்லி உன்ன குழப்ப வேணாம்னு தான் இருந்துட்டோம். சரி நல்ல படியா கிளம்புங்கனு சொல்லிட்டு ஹெட் மாஸ்டர் கிளம்பினார். ஏம்பா ஊரெல்லாம் செல் போன் வந்துட்டு நீ என்னனா இன்னும் ஒன்னும் இல்லாம இருக்கியேனு போஸ்ட் மாஸ்டர் சொன்னதும், எனக்கெதுக்குயா ஏதாவது அவசரம்னா பக்கத்துல அன்பண்ணன் வீட்டுக்கு போன் வந்துடும். சரிப்பா நீ கிளம்பு பார்த்துக்கலாம், இந்தா இந்த பணத்தை வச்சிக்கோ ஏதாவது அவசர தேவைன்னா எனக்கு போன் பண்ணு நான் அந்த ஊர் போஸ்ட் ஆபீஸ் மூலமா உனக்கு ஏற்பாடு பண்ணி கொடுத்துடுறேன். சரியா பார்த்து போ. நானும் புறப்படுறேனு சொல்லிட்டு போஸ்ட் மாஸ்டர் கிளம்பினார்.

கொஞ்ச நேரத்தில் மூத்த மாப்பிளை வந்ததும் ரெண்டு பேரும் கிளம்புனாங்க. ஏப்புள்ள எதுக்கு கலங்கி உட்கார்ந்துருக்க, நமக்கு சாமி துணை இருக்கு நீ கவலைப்படாத. படி, இல்லேனா வேடிக்கை பாரு , தூக்கம் வந்தா தூங்கு, குழப்பிட்டு இருக்காதனு மூத்த மாப்பிளை சொல்லிகிட்டே வண்டிய ஓட்டினார். நாலு மணிக்கெல்லாம் கர்நாடகா பார்டர் போயாச்சு. மாப்பிளை ரொம்ப வேகமா வந்துட்டீங்க போல அதுக்குள்ள தமிழ் நாட்டை தாண்டிட்டோம், இல்லை மாமா இவ்ளோ நேரம் தான் ஆகும், இங்கிருந்து இன்னும் நாலஞ்சி மணி நேரம் ஆகும் மைசூர் போக. அப்படியா முன்ன பின்ன வந்துருந்தாத்தானே தெரியும்னு சொல்லிட்டு ரோட்டை வெறிச்சு பார்த்துட்டே வந்தார்.

மைசூர் ஸ்டேஷனை அடைந்ததும் மூவரும் கொண்டு வந்திருந்த உணவை உண்டு அங்குள்ள பயணிகள் அரை நாற்காலியில் சாய்ந்து தூங்கி போயினர். ரெயில் வருவதற்கு முன் இருவரும் தயாராகி ரயிலுக்காக காத்திருந்தனர். ரெயில் வந்ததும் அவர்களை ஏற்றிவிட்டுட்டு மூத்த மாப்பிளை புறப்பட்டார். இவர்களுக்கு பக்கத்து சீட்டில் உட்கார்ந்திருந்தவர் செல்போனில் தமிழில் பேசியதை கண்டு காமராசு அண்ணனுக்கு ஏக சந்தோசம். அவரிடம் சென்று தாங்கள் தமிழகத்திலிருந்து நீட் தேர்விற்க்காக இந்தூர் செல்வதாக கூறும்பொழுதே அவரும் தன் மகனை அழைத்துக்கொண்டு அங்கு தான் போவதாக கூறினார்.

தான் பெங்களூருவில் வேலை செய்வதாகவும் 25 வருடங்களுக்கு மேல் இங்கு தான் இருப்பதாகவும் தெரிவித்தார். தொடர்ந்து அவர்கள் இருவரும் உரையாடிக் கொண்டிருந்தார்கள். கர்நாடகத்தை தாண்டி ரயில் சென்றுக் கொண்டிருந்தது.

மதிய உணவிற்கு பிறகு, ''கர்நாடக முழுமையும் நான் பார்த்த வரையில் அனைத்து நீர்நிலையிலும் ஆத்துலையும் தண்ணீ இருக்கு, பிறகெப்படி தண்ணி பத்தலைன்னு காவிரில தண்ணி தொறக்க மாட்டீங்குறாங்க. எது உண்மைன்னு'' அவரிடம் கேட்டார். அதற்கு அவர் ''எல்லாம் சில அரசியல் இயக்கங்களால் அமைப்புகளால் வந்த நிலை. தற்பொழுது பிரச்சனை கையை மீறி போயிட்டு, இனி தண்ணி கொடுத்தால் அது தனக்கான ஓட்டுசரிவை ஏற்படுத்துமோங்குற பயம் ஆட்சில இருக்கிறவங்களுக்கு வந்துட்டு, அந்தளவு சில அமைப்புகள் தங்கள் சுயலாபத்துக்காக இந்த பிரச்சனையை ஊதி பெருசாக்கிட்டாங்க.

இனி அந்த நிலை மாறுவது ரொம்ப கஷ்டம். ஒரே வாய்ப்பு நீதிமன்றம் கடுமை காட்டினால் ஒழிய தண்ணி திறக்க வாய்ப்பில்லை'' என்றார். இதை கேட்டு நொந்து கொண்ட காமராசு அண்ணன் இது என்னங்க நியாயம் தவிச்சவனுக்கு தண்ணி கொடுத்தா தானே நாமெல்லாம் மனுசங்க. அப்படி புடிச்சுவச்சு என்னத்த கொண்டு போக போறாங்க. அங்க எல்லாம் செத்துட்டு இருக்கோம். நானெல்லாம் தண்ணி இல்லாம விவசாயம் பண்ணமுடியாம இப்ப சோத்துக்கே சிங்கி அடிச்சிட்டு இருக்கேன் '' என புலம்பலானார். சரி நீங்க என்ன செய்வீங்க எங்க தலையெழுத்துனு'' சொல்லிட்டு சன்னல் வழியே தெரிந்த பச்சை நிலத்தை ஏங்கி பார்க்க ஆரம்பித்தார்.

விடியற்காலை இந்தூரை அடைந்ததும் நால்வரும் ரெயிலை விட்டு இறங்கினர். காமராசு அண்ணன் அவரிடம் '' எங்க ஊரு போஸ்ட் மாஸ்டரோட சிநேகிதன் இங்க வரேன்னு சொன்னார். இதுல அவர் நம்பர் இருக்கு உங்க செல்லுல போட்டு தரீங்களா, நாம எல்லாம் சேர்ந்து அவரோடையே போய்டுவோம்னு'' சொன்னதும், உடனே அவர் அந்த நம்பருக்கு அழைத்து பேசி அவரை சந்தித்தனர். வீட்டிற்கு போகலாம் என கூப்பிட்ட சிநேகிதரிடம் '' வேண்டாம்ங்க நாங்க ரயிலுலேயே குளிச்சி ரெடியாகிட்டோம், நேரத்தோட ஸ்கூலுக்கு போகலாம்னு அண்ணன் சொல்லிச்சு. சரினு போகும் வழியில் உள்ள ஒரு மலையாள கடையில் சாப்பிட்டுட்டு ஸ்கூலை அடைந்தார்கள். அங்கு அவர்களை விட்டுவிட்டு தான் வேலைக்கு செல்வதாகவும் மதியம் வருவதாகவும் ஏதாவது எனில் என் நம்பருக்கு அழைக்கவும் என கூறி போஸ்ட் மாஸ்டர் சிநேகிதன் சென்றார்.

பள்ளி கதவு திறந்து மாணவர்களை உள்ளே வர சொன்னார்கள். இருவரும் உள் சென்றதும், காமராசு அண்ணன் ''என்னங்க ஒரு பொம்பள புள்ளையையும் காணுமே நம்ம புள்ள மட்டும் தனியா போகுதேன்னு'' கேட்டார். அதுக்கு அவர் ''இங்கெல்லாம் பொம்பள புள்ளைங்கள படிக்க அனுப்புறத்தே ரொம்ப அபூர்வம், நம்ம ஊர் மாதிரி இல்லைனு சொன்னதும், தன்னோட அம்மா அந்த காலத்துலயே பத்தாம் வகுப்பு படிச்சவர் என்பதை நினைத்து பூரிப்பு கொண்டார் காமராசு அண்ணன். பேசிக்கொண்டிருக்கும் பொழுதே தலை விரிகோலமாக நடு மவ ஓடியாருறதா பார்த்துட்டு பதறியடித்து கேட்டை நோக்கி ஓடினார் காமராசு அண்ணன்.

என்னத்தா என்னாச்சு, ''எப்பா எனக்கு பயமா இருக்குப்பா, இந்தாங்க தோடு மணியெல்லாம் கழட்ட சொல்லிட்டாங்க, முடியையும் கட்ட கூடாதம்னு சொல்லிட்டு அழுவுச்சு. இவரும் கலங்கி புள்ளைக்கு தைரியம் சொல்லி அனுப்பி வைத்தார். மனசு பதபத்தப்பாவே பரிட்சை முடியுற வரை காமராசு அண்ணனுக்கு இருந்தது, அவரும் அண்ணனிடம் பேச்சு கொடுத்து பார்த்தார் ஆனால் அண்ணனால் இயல்பாக முடியல.

மொழி தெரியாத எடத்துல புள்ள  எப்படி கஷ்டப்படுதோனு ஒரே பதட்டத்துலயே இருந்தார். ஒரு பொம்பளை டீச்சரை கூட அண்ணன் பார்க்காதது இன்னும் பதட்டத்தை கூட்டியது. பரிட்சை முடிஞ்சு புள்ள வெளியில வந்து அப்பா கையா இறுக்கி புடிச்சுக்கிட்டு, முகமெல்லாம் வெளிறு போயிருந்தது. ‘‘ என்னத்தா ஒரு மாதிரி இருக்கியே பரிட்சை கஷ்டமா இருந்ததான்னு கேட்டத்துக்கும் பதில் இல்லை. சரி ரொம்ப கேக்க வேணாம்னு அப்படியே விட்டுட்டு போஸ்ட் மாஸ்டர் சிநேகிதன் வந்ததும் மீண்டும் ரெயில் நிலையம் சென்றனர். ரெயிலுக்கு நேரமாகிடும் என்பதால் போஸ்ட் மாஸ்டர் வற்புறுத்தியும் அவர் வீட்டுக்கு செல்ல இயலாமல் ரெயிலேறினார்கள்.

புள்ள எதுவும் பேசாமல் தூங்கி போனாள். அண்ணனுக்கு ஒன்றும் புரியாமல் அவள் அருகிலேயே உட்கார்ந்துக்கிட்டார்.  அடுத்த நாள் மாலை சென்னையை அடைந்து பிறகு பஸ் புடிச்சு விடியற்காலையில் வீட்டிற்கு சென்றனர், அதுவரை சரியாக பேசாத மவ, சிவகாமி அக்காவை பார்த்ததும் கட்டி புடிச்சிட்டு அழ ஆரம்பிச்சிட்டு, யாருக்கும் ஒன்னும் புரியாம என்னாச்சுன்னு கேட்க அது ‘‘யம்மா பரிட்சைக்கு போறப்ப செக்கிங்குனு தோடு, செயின் வளையல் எல்லாத்தையும் கழட்ட சொன்னாங்க, முடியையும் விரிச்சுட சொல்லிட்டாங்க, எல்லாத்தையும் அப்பாட்ட கொடுத்துட்டு திரும்பி உள்ள போறப்ப ஒருத்தர் என் ட்ரெஸ்ஸல்லம் செக் பண்ணனும்னு சொல்லி ஒரு மிஷினை எடுத்துட்டு வந்து என் உடம்பு பூரா தட்டி தடவி பார்த்தார், அப்ப அவர் கை கண்ட இடத்துல பட்டுது எனக்கு அழுகையா வந்துட்டு, அதுக்குள்ள இன்னும் ரெண்டு பேர் வந்து அதுபோல் பண்ணுனாங்க, அவங்களுக்குள்ள கிந்தில பேசி சிரிச்சிக்கிட்டே பண்ணுனாங்க,

எனக்கு அழுகையை அடக்க முடியாம வெளிய போக போனேன் என்னை இழுத்து உள்ள தள்ளுறேன்னு சொல்லி எல்லா இடத்துலயும் கைய வச்சு தள்ளிவிட்டாங்கமானு சொல்லி வெடித்து அழுவுச்சு, இதை கேட்டு கோவத்தின் உச்சிக்கு போன காமராசு அண்ணன் ‘‘ அங்கேயே சொல்லிருந்தா அவனுங்கள வெட்டி போட்டுருப்பேனே ஆத்தா, அவனுங்களை நம்பி தானே புள்ளைங்கள படிக்க அனுப்புறோம்.

நல்லா படிச்சு நல்லபடியா இருக்கணும்னு நெனைக்குறது ஒரு குத்தமா, என் வாழ்க்கை தான் தண்ணியில்லாம இப்படி நாய் பொலப்பாகிட்டு, புள்ளைகளையும் படிக்க விட மாட்டானுங்க போலவே, சீட்டு கொடுக்குறதுக்கு முன்னாடியே நம்மள இப்படி கஷ்டப்படுத்துறவுனுங்க, நாளைக்கு சீட்டு கொடுத்து ஊரு பெரு தெரியாத இடத்துக்கு போவ சொல்லுவாங்க, அங்க என்னென்ன பண்ணுவாங்களோ?, போதுமாத்தா நீங்க படிச்சது, நாம கூலி வேலை பார்த்தாலும் நல்ல படியாவே இங்குனவே இருந்துடுவோம்னு சொல்லி சரிந்து விழுந்தார்.

இப்ப சிவகாமி அக்காவும் நடு மவளும் ரெயில்வேகேட்ல பழம் விக்கிறாங்க, சின்னவன் காண்ட்ராக்ட் காரர்ட்ட வேலைக்கு போறான். அவங்களுக்கு தெரியாது, தாங்கள் ஓட்டுக்கு மட்டுமே உதவும் உதிரிகள் என்றும், தங்களோட நிலைக்கு காரணம் அரசுகளும் அமைப்புகளுமென்றும்.

**– ரா.ராஜராஜன்**, மன்னார்குடி

# பரங்கிப் பழம்

இது ஒரு வெப்ப மண்டல தாவரம். மெக்சிகோவில் ஆராய்ச்சியின் போது கிடைத்த இதன் விதைகள் சுமார் 9000 ஆண்டுகள் பழமையானவை என்பதாலும் அறுவடை திருநாள் கொண்டாட்டங்களின் போது அம்மக்கள் பரங்கிப் பழங்களை கொண்டு அலங்காரமும், உணவு வகைகளையும் பாரம்பரியமாக செய்து வருவதைக் கொண்டு பரங்கியின் பூர்வீகம் மெக்சிகோவாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

பரங்கி இலை, பூ, பிஞ்சு, காய், பழம், விதை என அனைத்தும் உண்ணத் தகுந்ததாகும். ஒவ்வொன்றிலிருந்தும் ஒவ்வொரு சுவையும் பலனும் கிடைக்கும். கொடியிலிருந்து பறிக்கும் போது எந்த அளவு காய் முற்றியிருந்ததோ, அதே அளவிற்கு தான் இருக்கும். அதற்கு மேல் முற்றவோ பழுக்கவோ செய்யாது. எனவே பெரிய காய் அல்லது பழத்தை நெடுநாட்கள் வரை வீட்டில் பாதுகாத்து வைத்திருக்க முடியும்.

நன்றாக பழுத்த பரங்கிப் பழத்தில்,

பீட்டா கரோட்டின் குவிஞ்சு கிடக்காம்.
ஏராளமாக பொட்டாசியம் இருக்காம்.
தாராளமாக பைபர் இருக்காம்.
ஆன்டி ஆக்சிடன்ட் அதிகமா இருக்காம்.
வைட்டமின் அ வை வாரி வழங்குமாம்.
வைட்டமின் ஒ வை கொட்டி வைச்சிருக்காம்.
வைட்டமின் இ யும் சிறப்பா இருக்குதாம்.

இதோட வைட்டமின் ஆ, ஜின்க், மெக்னீசியம், ஜீயுஜனாதின் ல்லாம் இருக்குதாம்.

கலோரி மிகவும் குறைவா இருக்கிறதால நீரிழிவு நோய் உள்ளவங்க நிறைய சாப்பிடலாமாம்.

இதை சாப்பிட்டா கேன்சர் வராதாம்.

சுவாச உறுப்புகளை சீராக செயல்பட வைக்கிறதால ஆஸ்துமா வராதாம்.

ரத்த குழாயில் கொழுப்புப் படிவதை குறைக்குமாம். இதனால் ரத்த கொதிப்பு, இதய நோய்கள் வராதாம்.

நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்குமாம்.

சுரம் வராதாம், சளி பிடிக்காதாம். உடம்பிலிருந்து விஷங்களை வெளியேற்றுமாம்..

வாயுத்தொல்லையைக் குறைக்குமாம். வயித்துப் புண்ணை ஆத்துமாம். அல்சர் வரவிடாதாம்.

கண் பார்வைத் திறனை அதிகரிக்குமாம். கண்ணில் உள்ள ரெடினாவை பாதுகாக்குமாம். கண்ணின் நரம்புகளை வலுப்பெற செய்யுமாம்.

ரெமுடாய்ட் ஆர்த்தரைடீஸ் வியாதியினால் ஏற்படும் மூட்டு வீக்கங்களை குறைக்குமாம்.

புரோஸ்டேட் (ஆண் விதை) வீக்கத்தை குறைக்குமாம்.
எலும்புகளை வலுவாக்குமாம். இதயத்தை வலுவாக்குமாம்.

உடல் திசுக்கள் வளர உதவுமாம்.
முடி வளருமாம், பருக்கள் மறையுமாம்.
இளமை திரும்புமாம்..

இவ்வளவு பலன்கள் உள்ள பரங்கிப் பழத்தை எப்படி சிறு பிள்ளைகளுக்கு பிடிக்கும் வகையில் சமைக்கலாம் என பார்ப்போம்.

பரங்கிப்பழத்தில் சமைக்க ஐம்பதிற்கும் மேற்பட்ட வகைகள் இருந்தாலும் எனக்கு மிகவும் பிடித்தது
பரங்கி அல்வா:

நமது உள்ளூர் பரங்கியே சுவை, மனம், நலம் நிறைந்தது. நன்கு கனிந்த பழத்தை தேர்ந்தெடுத்தால் சுவை மற்றும் இயற்கையான இனிப்பு அதிகமாகவே இருக்கும்.

தேவையான பொருட்கள்:
பரங்கி பழம்
+ நெய்
+ முந்திரி

இதில் அவரவர் விருப்பம் போல பாதாம், பிஸ்தா, உலர்ந்த திராட்சை, நிலக்கடலை, வெள்ளரி விதை, தேங்காய் துருவல் சேர்த்துக் கொள்ளலாம்.
தேவையான அளவு பரங்கிப்பழத்தை சிறு துண்டுகளாக வெட்டி எடுத்து இட்லி பானை அல்லது பிரஷர் குக்கரில் வேக வைத்து எடுத்துக்கொள்ளவும்.
சாப்பிடும்போது ஏலக்காய் வாயில் தட்டுப்படுவதை விரும்பாதவர்கள் முழு ஏலக்காயை பரங்கி வேகவைக்கும் போது போட்டுவிட்டு வாணலியில் போடும் முன்னர் எடுத்து விடலாம்.
ஒரு வாணலியில் தாராளமாக நெய் விட்டு சூடானவுடன் மேலே சொன்ன முந்திரி அல்லது இதர பொருட்களை போட்டு வதக்கிக் கொள்ளவும்.

பின்னர் வேக வைத்த பரங்கி துண்டுகளை வாணலியில் போட்டு சிறிது நேரம் கிண்டினால் நசிந்துவிடும்.

சுவையான மனம் வீசும் அல்வா தயார்.

இதில் சிறப்பு என்னவென்றால் இதில் சீனி அல்லது எந்த இனிப்பும் கலக்க தேவையில்லை. இயல்பாகவே இனிப்பு இருக்கும்.
நீரிழிவு நோய் உள்ளவர்கள் எந்த தடையுமின்றி சாப்பிடலாம்.
அடை, தோசை, பிரட் மீது ஜாம் போல கனமாக தடவி சாப்பிடலாம்.
காலை உணவாகவோ, மாலை சிற்றுண்டியாகவோ சாப்பிடலாம்.

எந்த வயதினருக்கும் ஏற்ற, எந்த நோயுள்ளவர்க்கும் உகந்த மருத்துவ குணங்கள் அடங்கிய எளிதில் செரித்து, நீண்ட நேரம் சக்தி தரக்கூடிய சுவையான உணவு இது.

- வி. செந்தில்
மன்னார்குடி

# மங்கை எனும் மண் பொம்மை

பெண் குழந்தையென்றால் கருவில் கூட அழிக்க எண்ணும் அன்றைய ஆண்கள், தற்போதோ எனக்கு பெண் குழந்தை வேண்டும் என்று பிரார்த்திக்கிறார்கள்.

காரணம், தான் ஓர் பெண்ணின் வழியாகவே இவ்வுலகிற்கு வந்தோம் என உணர்ந்தமையால்!

தாயின் பெயரையே மகளுக்குச் சூட்டி அழகுப் பார்ப்பவர்கள்,
தாய்க்குப் பின் தாரம் என நம்புபவர்கள், தாயையும் மகளையும் தெய்வம் என வணங்குவர்.

இது இந்தியாவின் ஒளிர் பகுதி....

இருள் சூழ்ந்த பகுதியோ கேட்பாரற்று கிடக்கிறது. குருதியும் தசையுமாய் சிதறிக் கிடக்கிறது.

நடைப்பாதை எங்கும் பிணவறைகளாய் காட்சியளிக்கிறது. தோண்டத் தோண்ட வைரம் கிடைக்கும் என்பார்கள். ஆனால் தங்கமே, வைரமே என கொஞ்சிய எங்கள் பிள்ளைகள்

தான் கிடைத்தார்கள். அதில் என் பிள்ளையை அடையாளம் கண்டேன். பதைப்பதைத்து போனேன்...

அவளைப் பெற்றெடுக்கையில் நான் அனுபவித்த வலியை விட அவள் தாங்கியிருந்த வலி அதிகம் என ஆறா காயங்கள் இரத்தக் கண்ணீர் வடித்தனர். கதறி அழுவதைத் தவிற எனக்கு வேறு வழி தெரியவில்லை சுற்றிலும் வயது பேதமின்றி பிணங்கள்.வக்கிற புத்திக் கொண்ட மிருகங்கள் கொடூரமாய் வேட்டையாடிருந்தன. போதைக்குப் பேதைகளைத் தின்றன.

தங்கை என எண்ண வேண்டிய மங்கையை மண் பொம்மைகளாய் நினைத்தன.

வெறி தலைக்கேறியவனோ, அரிவையைக் கூட விட்டு வைக்கவில்லை. சிலையாய் வெளி வந்தோம், மனதை திடப்படுத்தி ஒளிர் பகுதியில் வாழ்ந்து வருகிறோம்.எல்லாவற்றிலும் சாதி சமயம் பார்ப்பவர்கள் இதில் மட்டும் ஏன் பார்க்கவில்லையோ என தோன்றியது. அப்படியாவது ஒரு சிலர் உயிர் பிழைத்திருப்பார்களே என்ற அற்ப ஆசை.கடவுளிடம் முறையிட்டேன்

அவரோ நான் ஆணையும் பெண்ணையும் படைத்தது துணையாக வாழவே, துன்புறுத்தல்ல. இவற்றுள் ஒன்றைத் தேர்ந்தெடுப்பது உங்கள் வளர்ச்சி தான் நான் அல்ல; என்னை ஏன் கேட்கிறீர்கள் என்றார். உண்மைதான். என்னை நானே கேட்டுக்கொண்டேன். மாற்றமே முடிவு என்றது.

மாற வேண்டியது நம் பிள்ளைகள் அல்ல..
பெண் என்றால் வெறும் சதையாக மட்டுமே எண்ணும் கேவலமான பிறப்புகளே, மாற வேண்டியது நீங்கள் தான். கனவோடும் லட்சியத்தோடும் வாழும் உயிர் என கருதுங்கள்.

அவர்களின் கூக்குரல்கள் காதுகளில் அலறுகிறது. உங்கள் காதுகளிலும் ஒலிக்கும் அலட்சியப்படுத்தாதீர்கள். இல்லையேல் பிள்ளைகளைப் பிணங்களாக தேடுவதே வேலையாகிவிடும்.

பெற்றோர்களே, இனியாவது சொல்லி வளர்த்திடுங்கள் ஆண் பிள்ளையிடம், உன் தங்கைகளைக் காப்பது உமது கடமை என்று வீரத்தோடும்.

பெண் பிள்ளையிடம், துணிந்து தலை நிமிர்ந்து செல் என்று நம்பிக்கையோடும் சொல்லுங்கள்.

– நித்யா சம்பத்

## எங்கே செல்கிறது??

எதை நோக்கிப் போகுதிந்த சமூகம்
என்றறியாமலே ஒவ்வொரு நாட்களும்
ஓடிச்செல்கிறது வந்த வழியே ...!!

தான், தன் குடும்பம் என
தனித்துவ எண்ணங்கள்!
அடுத்தவர் வீட்டில் கொலை நடந்தாலும்
அதைத் தூக்கிப் போட்டுத்
தன் வழிச் செல்லும் சிந்தனைகள்..!!

நமக்கு ஓர் தேவையென்றால்
மற்றவர்களும் வேடிக்கைப் பார்க்கின்றனர்
மனிதம் மறந்து....!!

எவன் குழந்தை பாலியல் வன்கொடுமை
ஆளானால் என்ன!
தன் வீட்டுப் பெண்கள்
தன்னை மட்டும் நினைக்க வேண்டும் என்ற
மனம்..

பட்டப்பகலில் கொள்ளை
பரிதவிக்கும் கொள்கை
இயலாமை மக்கள்
இயன்றவரை லாபம் தேடும் அரசியல்
தலைவர்கள் - என

எங்கே செல்கிறது
இந்தப் பாதை
என்றறியாமலே
என் பயணம்



மன்னை ஜீவிதா

## தடுமாறிப் போனேன்....

மனதில் இருப்பதை
உனக்குணர்த்தவே தேடித்திரிந்தேன்
வார்த்தைகளை...

பட்டதைப் பட்டெனப் பேசினாலும்
அதைப் பக்குவமாய் எடுத்துக்
கொள்ளும் சாமர்த்தியமும்
எனக்குண்டு

துணிச்சல் மிகுந்திருந்தும் அதனை
துணிந்து சொல்ல துணிவில்லை
எனக்கு...

கண்களின் வழியே காதல் பரிமாற்றம்
பற்றி என்றோ ஓர் நாள்
கேட்டதுண்டு...

இன்று உணர்ந்தேன் அதை
உன்னால்...

உன் அசையாப் பார்வையால் என்
அனைத்தையும்
அறிபவனே...இமைக்கும் நேரமும்
வேண்டாம், இமை திறக்கும் நேரமும்
வேண்டாம், இமைக்காமல் நீ எனைக்
காணும் நேரம்..அது மட்டுமே
நீளட்டும் முடிவிலியாக.....

க. உதயநிதி
இளங்கலை ஆங்கிலம்
இரண்டாம் ஆண்டு,
மன்னை இராசகோபாலசுவாமி
அரசினர் கலைக்கல்லூரி

# அதனால் என்ன? அடுத்து என்ன?



மன்னை ராம்

எதைப் பற்றி எழுதலாம் என யோசித்து யோசித்து தோற்றேப் போனேன்.

ஆகையால் தோல்வியைப் பற்றியே எழுதலாம் என்று யோசித்தேன்.

தோல்வி பல வகை உண்டு

உதாரணமாக, தேர்வு, போட்டி, வியாபாரம் மற்றும் காதல் என்று பட்டியல் நீண்டுக் கொண்டே செல்லலாம்.

முதலில் தோல்வி என்பது என்ன என்று சிந்திப்போம்.

இலக்கை நோக்கி நாம் செய்யும் முயற்சியில் தடையோ, தாமதமோ ஏற்பட்டால் அதைத் தோல்வி என்கிறோம்.

தோல்வி வந்தவுடன் இனி முடியாது என்று எதிர்மறையாகச் சிந்தித்து முயற்சியை நிறுத்திவிடுகிறோம். அது தோல்வியாக மாறிவிடுகிறது.

வெற்றி, தோல்வியின் மறுமுனையில் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

ஒரு தோல்வியில் இருந்து நாம் மனம் துவண்டு போகலாம் அல்லது அதிலிருந்து கற்றுக்கொள்ளலாம்.

அது நம் மனநிலையை பொருத்தே அமைகிறது .

நாம் பெரும் வெற்றி, பெயர், புகழ், செல்வம் மற்றும் மரியாதையைப் பெற்றுத்தரும். ஆனால் தோல்வியை அரவணைத்து சென்றால் நமது இலக்கை நோக்கி எந்த ஒரு சலனமும் இன்று பயணிக்க உதவும்.

‘‘தன் முயற்சியில் சற்றும் தளராத விக்கிரமாதித்தன்‘‘

இந்த வரிகளை எங்கோ படித்ததுப் போல இருக்கிறதா? விக்கிரமாதித்தன் கதையின்



பிரியா மன்னை

முதல் வரிகள் இவைகளே, இதில் வேதாளம் கதை சொல்லும்,விக்கிரமாதித்தன் சரியான பதிலை சொல்லுவான்.மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறும்.

நான் இதில் கோடிட்டு காட்ட நினைக்கும் சொல் தன் முயற்சியில் சற்றும் தளராத என்கிற வார்த்தைகளைத்தான்.

இந்த வார்த்தைகளுக்கு உதாரணமாக ஒரு சிலந்தியின் கதையை சொல்லலாம்.

இங்கிலாந்தை எதிர்த்துப் போரிட்ட புரூஸ்க்கு தோல்வியே மிஞ்சியது. விரக்தி அடைந்த இராபர்ட் புரூஸ் ஒரு மலை குகைக்குச் சென்று மறைந்து இருந்தான்.

ஒருநாள் அந்த குகைக்குள் இருந்த சிலந்தி ஒன்று தனக்கான வலையைப் பின்னிக் கொண்டிருந்தது. வலை பின்னும் போது காற்றினால் நூலிழையைப் பிடித்தவாறு இங்கும் அங்கும் அந்த சிலந்தி ஆடிக் கொண்டிருந்தது. அந்த நூலிழையினை குகையின் சுவற்றில் ஒட்ட வைக்கவேண்டும். அப்போதுதான் தொடர்ந்து வலையைப் பின்ன முடியும். அந்த சிலந்தி இதற்காக பல முறை போராடியது. ஆனால் அதனால் அந்த நூலின் முனையை குகைச் சுவற்றில் ஒட்ட வைக்க முடியவில்லை. குகைக்குள் உட்கார்ந்திருந்த இராபர்ட் புரூஸ் சிலந்தியின் இந்த போராட்டத்தை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தான்.

சிலந்தியின் போராட்டம் சில மணி நேரம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனால் சிலந்தி ஓயவே இல்லை. தொடர்ந்து போராடி ஒரு கட்டத்தில் அது நூலிழையினை சுவற்றில் ஒட்டி தனது வலையினை வெற்றிகரமாகப் பின்னி முடித்தது. இதைப் பார்த்து ஆச்சரியப்பட்ட இராபர்ட் புரூஸின் மனதில் ஒரு வெற்றி பிறந்தது. ஒரு சின்னஞ்சிறு சிலந்தி போராடி அடைந்த வெற்றி அவன் மனதில் ஒரு புது உத்வேகத்தை ஏற்படுத்தியது. அங்கிருந்து உடனே புறப்பட்டுச் சென்று தனது படிவீரர்களை ஒன்று திரட்டி இங்கிலாந்து நாட்டுப் போர் வீரர்களை துரத்தி அடித்தான். வெற்றி வீரனாய் ஸ்கொட்லாந்து தேசத்தின் வலிமையான மன்னனாய் பதவி ஏற்றுக் கொண்டான் என்பது வரலாறு நமக்கு சொல்லும் பாடம்.

மிகச்சிறந்த வாய்ப்புக்கள் அனைத்தும், பிரச்சனைகளால் போர்த்தப்பட்டவைதான். முள் நிறைந்த கடினமான தோலை உரித்துப் பார்க்கிறவர்களால் மட்டும்தான் வாய்ப்புகள் என்ற பலாச்சுளைகளை ருசி பார்க்க முடியும். பிரச்சினை என்னவென்றால்,

பெரும்பாலானவர்கள் பிரச்சனை என்ற தோலைப் பார்த்தவுடன் மலைப்புடன் நின்று விடுகிறார்கள் என்பதுதான்.

எந்தத் தோல்வியும் பெரிதல்ல. அதைப் பூதாகரமாக ஆக்கி விடுவது நம் எண்ணங்கள் தான். அந்தந்தப் பருவத்தில் பெரிதாகத் தெரியும் தோல்விகள் காலமும் தூரமும் கடந்து நோக்குகையில் அற்ப விஷயமாகத் தெரியும்.

வென்றவர் யாரும் ஒரே நாளில் வெற்றியை வீட்டுக்கு அழைத்து வந்தவர் அல்ல, வாழ்ந்தவர் யாரும் தோல்வியை காணாது கடந்தவர் அல்ல.

எல்லா தோல்விகளும், அனைவரையும் ஒரே மாதிரி பாதிப்பதில்லை. தோல்வியடைந்தவர்களில், மனமுடைந்து வருத்தபடுபவர்கள் ஒரு ரகம். ஆனால், அவர்களை விட மோசமான தோல்வியடைந்தவர்கள், பரவாயில்லை, எனக்கு இது ஒரு நல்ல பாடம் என்று ஆக்கப்பூர்வமாக எடுத்துக் கொள்பவர்கள் மறு ரகம். நாம் இந்த இரண்டாவது ரகத்தைச் சார்ந்தவராக இருக்கலாம்! எப்போதெல்லாம் பிரச்னை மற்றும் தோல்வியைச் சந்திக்க நேர்கிறதோ, அப்போது இரண்டு கேள்விகளை நமக்கு நாமே கேட்டுக் கொள்வோம்,

அதனால் என்ன? அடுத்து என்ன? நல்ல வழி தானாகவே பிறக்கும்

தோல்வி நிலை என நினைத்தால் மனிதன் வாழ்வை நினைக்கலாமா ?
என்ற வரிகள் மனதில்...

**- மன்னை ராம்**

---

# வாழ்வதற்கே வாழ்க்கை

இந்த உலகம் உனக்கு
சிறையல்ல நீதான்
கைதியாய் வாழ்கிறாய்

நீ மண்ணுக்காக போராட
தயங்குகிறாய் ஆனால்
ஒவ்வொரு விதையும்
மண்ணோடு போராடியே
மரமாகிறது

வியர்வை சிந்தாத உன்னாலும்
மை சிந்தாத பேனாவாலும்
எதையும் சாதித்திட முடியாது

தடைத் தாண்டி
ஓடிக் கொண்டிருப்பவனுக்குத்
தடைகள் கண்ணுக்குத் தெரியாது,
நீ நினைப்பது போல வாழ்க்கை
ஒன்றும் மாரத்தான் ஓட்டமல்ல,
அது தடைத்தாண்டும் ஓட்டமே......

பெருமை
என்பது உன்னைவிட
திறமைசாலிக்கு நீ

கைதட்டுவதில் அல்ல,
அவனையும் உனக்காக
கைதட்ட வைப்பதுதான்

இந்த உலகம் பூந்தோட்டமல்ல
நீ வளர தண்ணீர் ஊற்ற,
இந்த உலகம் பெருங்காடு
நீயாத்தான் வளரவேண்டும்

உனக்கு
நண்பன் இருக்கிறானோ
இல்லையோ உனக்கு எதிரி
இருக்க வேண்டும்

ஏனெனில்
உன்னிடம் அணைக்கும் சக்தியைவிட
உன்னிடம் எதிர்க்கும் சக்தியையே
நான் அதிகம் எதிர்பார்க்கிறேன்

யாரு உன்னை உறிஞ்சி
எறிந்தாலும் முளைத்து வா
பனங்கொட்டையாய்!
அதில்தான் உள்ளது
தனித்தன்மை

யாருக்காகவும் கண்ணீர்விடு
யாராவது துடைக்க வருவார்கள்
என்பதற்காக கண்ணீர் விடாதே

உன்னில்
வளரும் நகத்தையும்,
முடியையும் வெட்ட
மறப்பதில்லை நீ
ஆனால்..
நீ வளர மறந்தால்
இந்த உலகமே உன்
கழுத்துக்கு கத்தியாகும்

வாழ்க்கையில் மிதக்க
கற்றுக் கொள்ளாதே
நீ இறந்தால் தானாகவே
மிதப்பாய்

நீந்தக் கற்றுக்கொள்
அதுவே நீ கரைசேர
உதவி செய்யும்

வாழ்க்கை என்பது
ஒரு புத்தகம் அதில்
ஒரு பக்கம் மட்டும்
வாழ்க்கையல்ல

ஒவ்வொரு
பக்கங்களானதே
வாழ்க்கை

உன்
பேனாவைக் கூட
மூடிவைக்காதே
அதை திறக்கும்
வினாடிகளில் கூட
நீ
எழுத நினைத்ததை
மறந்துவிடக் கூடும்

எல்லோருக்கும் வாழ்வதற்கான பொருள்
உண்டு. அதை அவரவர்தான் தேடிக்
கண்டுபிடிக்க வேண்டும்

கடலில் எத்தனை புயல்களைச்
சந்தித்தீர்கள் என்பதில் உலகுக்கு
அக்கறையில்லை.
கப்பலை கரைசேர்த்தீர்களா என்பதைச்
சொல்லுங்கள்..

ஜவகர்
மன்னை



# ஏன் போராட்டம்? எதற்காக போராட்டம்?

இன்று தமிழகம் முழுக்க எங்கு பார்த்தாலும் போராட்டம் வெடித்துக் கொண்டிருக்கையில், தமிழ்நாடே போராட்டக்களமாய் மாறிவரும் வேளையில், போராட்டம் தமிழகத்தின் பலம் என்பதை நம் எதிரிகள் உணர தொடங்கிய நிலையில் நாம் உணராமல் சிறு சலசலப்பு நம்மில் எழுந்ததால் இக்கட்டுரை எழுத நேரிடுகிறது.

ஏன் போராட்டம்? எதற்காக போராட்டம்? போராட்டம் என்பது ''உரக்கச் சொல்வதும் உரைக்கும்படி சொல்வதும் தான்''.

உரக்கச் சொல்வது என்பது நம் பிரச்சனையை பிரச்சாரம் செய்வது, நம் மக்கள் பிரச்சனையை நம் மக்களுக்கு உணரச் செய்வது, நம் பிரச்சனையை பிறர் அறியச் செய்வது, உலகறியச் செய்வது.

உரைக்கும்படி சொல்வது என்பது நம்மை ஆள்பவர்களுக்கும், அதிகார வர்கத்தினர்களுக்கும் சிரமப்படுத்தி நம் வலிமையை காட்டுவது, எதிர்ப்பைக் காட்டுவது. அதாவது போராட்டம் என்பது உலகுக்கு உரக்கச் சொல்வதும் ஆட்சியாளர்களுக்கு உரைக்கும்படி சொல்வதுமே ஆகும்.

காவிரிக்காக ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியை எதிர்த்தபோது சில சலசலப்புகள் தமிழ்நாட்டில் ஏற்பட்டது. காவிரிக்கும் கிரிக்கெட்டுக்கும் என்ன சம்பந்தம் என்ற கேள்வி எழுந்தது. ஊடகங்கள் இதை முறையாக மக்களுக்கு சொல்லவும் இல்லை.

சரி காவிரிக்கும் ஐ.பி.எல். க்கும் என்ன சம்பந்தம்?

போராட்டத்தை உரக்கச் சொல்ல, உலகறியச் செய்ய ஐ.பி.எல். ஒரு ஆயுதமாக அமைந்தது. ஏனெனில் ஐ.பி.எல் வெறும் விளையாட்டு போட்டி அல்ல. அது ஒரு வணிக விழா. மிகப்பெரிய வணிக விழா. சர்வதேச முதலாளிகள் கோடி கோடியாய் பணம் கொழிக்கும் வர்த்தக கலாச்சாரம். மக்களிடையே உணர்ச்சி மிகுந்த விளையாட்டாக கொண்டாட்டமாக திணிக்கப்படுகிறது. ஐ.பி.எல் தான் இனி வரப்போகும் கோடைகாலத்தின் விருந்தாக கொண்டாட்டமாக அத்தனை இந்திய ஒன்றியத்தின் மக்களுக்கும் உயிர் மூச்சாக இருக்கப்போகிறது. ஐ.பி.எல். போன்ற கோடி கோடியாய் பணம் கொழிக்கும் வர்த்தக விழாவை குறிவைத்து அடித்தால் தமிழக காவிரி



பிரச்சனையை உலகறியச் செய்ய முடியும் என்ற வியூகம் வகுக்கபட்டு தான் ஐ.பி.எல். முற்றுகை நடைபெற்றது. ஐ,பி.எல் முற்றுகையிடபட்டதன் நோக்கம் கவன ஈர்ப்பு தான்.

காவிரிக்கும் ஐ.பி.எல் க்கும் இன்னொரு முக்கியமான சம்பந்தம் உண்டு. அது தான் தண்ணீர். ஆமாம். ஐ.பி.எல் போட்டி ஒருமுறை சேப்பாக்கம் மைதானத்தில் நடப்பதற்கு 5.5 லட்சம் லிட்டர் தண்ணீர் பராமரிப்புக்காக விரயம் செய்யபடுகிறது. வீராணம் ஏரியில் இருந்து தானே அங்கு தண்ணீர் போகிறது. தமிழ்நாட்டில் இவ்வளவு தண்ணீர் பிரச்சனை போகும்போது, இவ்வளவு தண்ணீர் விளையாட்டுகாக பயன்படுத்துவதை எப்படி ஏற்க முடியும்? அதனால் தான் அவர்கள் ஐ.பி.எல் ஐ குறிவைத்து அடித்தார்கள்.

ஐ.பி.எல் க்கு இவ்வளவு தண்ணீர் தாகம் இருக்கிறது என்பதையும், சேப்பாக்கம் மைதானம் 5.5 லட்சம் லிட்டர் தண்ணீர் கேட்கிறது என்பதையும் பல சமூக ஆர்வலர்கள் நீண்ட நாட்களாக சொல்லிக்கொண்டு தான் வந்தார்கள். ஆனால் அதை ஊடகம் மறைத்தது.  ஐ. பி. எல் க்கும் காவிரிக்கும் என்ன சம்பந்தம் என்ற கேள்வியை தான் முன் வைத்து. போராட்டத்தை ஒரு காட்டுமிராண்டி தனமாக சித்தரித்தது.

ஆனால் ஒவ்வொரு போராட்டத்துக்கும் பின்னாடி எவ்வளவு அறிவியல் இருக்கிறது என்பதை நாம் இன்னும் உணரவில்லை. ஒரு இயக்குனர், தமிழகம் மட்டுமே விஞ்ஞானபூர்வமான போராட்டங்களை முன்னெடுக்கிறது என்றார். ஐ.பி.எல். என்னும் சர்வதேச முதலாளிகளின் குடும்ப விழாவை முற்றுகையிட்டு போராட்டம் செய்யும்போது தான் அது சர்வதேச ஊடகங்களை எட்டுகிறது. காவிரி பிரச்சனை உலகம் முழுக்க செல்கிறது.

போராட்டத்தின் அடி நாதம் பிரச்சனையை உணர்ந்து எத்தனை பேர் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள் என்பதே.  ஆள்பலமும் விழிப்புணர்வும் தான் போராளிகளின் தேவை. அதற்கே கவன ஈர்ப்பு செய்கிறார்கள். தற்கொலை செய்தாவது கவனத்தை திருப்புகிறார்கள்.

நான் பிறந்த மன்னார்குடியில் பிறந்த எனது ஊர்க்காரன் விக்னேசு காவிரிக்காக தனது கோரிக்கைகளை கடிதமாக எழுதிவிட்டு நெருப்பை கொளுத்திக்கொண்டு தற்கொலை செய்துகொண்டான். இதை கோழைத்தனம் என்றார்கள். முட்டாள்தனம் என்றார்கள். நான் செத்து விழுந்தால் அத்தனை பேரும் எழுந்திரிப்பான் என்று நினைத்தான். ஆனால் காவிரிக்காக ஒருவனும் எழுந்திரிக்கவில்லை. விக்னேசுவை முட்டாள் என்றும் கோழை என்றும் அவன் மரணத்தை கொச்சைப்படுத்தவே எழுந்திரித்தான். இப்படிப்பட்டவர்களை உணராமல் அவன் தற்கொலை செய்துகொண்டது முட்டாள்தனம் அல்ல, ஏமாளித்தனம். ஏமாந்துவிட்டான் விக்னேசு.

அவன் தற்கொலை செய்து மாண்டதை முட்டாள்தனம் என்று சொல்பவன் யார் தெரியுமா? மனைவியுடன் சண்டை போட்டுக்கொண்டு செத்துடலாம் போல இருக்கு என்று புலம்புபவன், கடன் பிரச்சனையால் செத்துடலாம் போல இருக்கு என்று

புலம்புபவன், காதலி காதலை ஏற்கவில்லை, என்னுடன் பகிரியில் பேசவில்லை என்பதற்காக செத்துடலாம் போல இருக்கு என்று புலம்புபவன், தொலைக்காட்சி சரியாக எடுக்கவில்லை, புள்ளி புள்ளியாக தெரிகிறது என்பதற்காக செத்துவிடலாம் போல இருக்கு என்று புலம்புபவன். இந்த புத்திசாலி கூட்டம் தான் விக்னேசுவை முட்டாள் என்கிறது.

தன் நிலத்தின் மீது கொண்ட நேசத்தால் உயர்ந்த இலட்சியத்தை கடிதமாக எழுதிவிட்டு தற்கொலை செய்து செத்தவனை, தன் அன்றாட வாழ்வின் எதார்த்த சிக்கல்களுக்கும் சிறு தொல்லைகளுக்கும் செத்துவிடலாம் போலிருக்கு என புலம்பும் கிணற்று தவளைகளுக்கு முட்டாள் என்று சொல்லும் யோக்கிதை உண்டா? நீங்கள் புலம்பியதுடன் நிறுத்திக்கொண்டீர்கள் சாகவில்லை, ஆனால் அவன் செத்துவிட்டான். அதனால் தான் அவன் முட்டாளோ!

என்று நம் எதிரி உணர்ந்த நமது பலத்தை நாம் உணர்கிறோமோ அப்போது தான் நம் நிலம் நமக்கு. நமது பலம் போராட்டம் தான்.

ஜல்லிகட்டு தடைக்கு பின் இருக்கும் சர்வதேச அரசியலையும், ஜல்லிகட்டுக்கு பின் இருக்கும் தமிழர்களின் அறிவியலையும் நாம் உணர்ந்த பின்பே அதற்காக போராடத் தொடங்கி வெற்றி கண்டோம். அதுபோல் காவிரிக்கு பின் இருக்கும் அரசியலை, ஆறுகளின் இயற்கையை, போராட்டங்கள் ஏந்தி நிற்கும் அறிவியலை உணரும்போதே நாம் ஒன்றுபடுவோம். வெற்றிபெறுவோம்.

- நிரஞ்சன்
மன்னார்குடி

---

# தமிழ் மொழி விழா

உலக தமிழ் மாநாடு கேட்டுள்ளேன், இது என்ன தமிழ் மொழி விழா? இதுவரை நம்மூரில் நடைபெறவில்லையே என்று நினைக்கும் தமிழர்கள் இது சிறந்த வழியாக உணர்வார்கள் மொழியை வளர்ப்பதில்.

பல மொழிகளின் சொற்கள், எழுத்துகள் என்று எங்கு பார்த்தாலும் ஆதிக்கம் செலுத்தும் இன்றைய நாளில், அதில் இருந்து மொழியை காப்பது மற்றும் இளையோர்களிடம் அதை எப்படி கொண்டுச் செல்வது என்று பல கேள்விகள் நம்மிடம் உள்ளது.

இதற்கு அவ்வளவு எளிதில் விடைக் கிடைக்காது, நாம் இவர்களை பின் தொடராவிட்டால். காரணம் இவர்கள் அரசின் உதவியுடன் உள்ளூர் பங்களிப்பாளர்கள்,




தமிழ் மொழி விழாவின் போது எடுக்கப்பட்ட ஒளிப்படம்.

தமிழ் மொழி ஆய்வாளர்கள் மற்றும் வளர்தமிழ் இயக்கத்துடன் இணைந்து ஒவ்வொரு ஆண்டும் ஒரு மாதம் முழுவதும் தமிழ் மொழி விழாவை ஒருங்கிணைக்கிறார்கள்.

தமிழ் மொழிக்காக சிங்கப்பூர் கலைஞர்கள் மட்டுமின்றி உலகின் பிறபகுதியில் உள்ள தமிழ் ஆர்வலர்கள், கலைஞர்கள், ஆய்வாளர்களை கொண்டு பட்டிமன்றம், நாடகம், தகவல் தொழிற்நுட்பத்தில் தமிழ் என்று பலதரப்பட்ட விதத்தில் அனைவரையும் கவரும் வண்ணம் ஏற்பாடு செய்து April மாதம் முழுவதும் நடைபெற செய்கிறார்கள்.

2007 முதல் ஒவ்வொரு ஆண்டும் தமிழ் மொழி விழாவாக April மாதம் முழுவதும் சிங்கப்பூர் தீவில் கொண்டாடப்படுகிறது.

நிகழ்ச்சி துவங்கும் முன், இம்மாதத்தின் முதல் நாளை தமிழ் மாதமாக அறிவித்து இந்த மாதம் முழுவதும் என்னென்ன போட்டி வைக்கப் போகிறார்கள் என்று அறிவித்தார்கள்.

பிற மொழி கலப்பில்லாமல் தமிழில் பேச, கவிதை, கட்டுரை, திருக்குறள் போன்ற போட்டிகள் என வைத்து தமிழர்களை ஊக்கப்படுத்துகிறார்கள்.

பறை இசை நடனத்துடன் தமிழ் மொழி விழாவில் மண்வாசனை தென்படுவதை பார்க்க அவ்வளவு அருமை.

சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவர் இடத்திலும் மொழிப்பற்றை அதிகரிக்க குடும்பத்துடன் பங்குகொண்டால் சிறப்பு என்று கூறினார்கள், முதல் முறையாக தமிழ் மொழி விழாவில் கலந்து கொண்ட பிரபு, அன்பரசன், கிரண், நிர்மல், எத்திராஜ், யோகேஷ், கார்த்திக் போன்ற தோழர்கள்.

நன்றி.

**- மன்னை மதி**

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

<u>நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்</u>
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட
## விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal மன்னையின் மைந்தர்கள்